# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 13ஆம் திகதிய*
## *பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2015. 03. 16 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## அரசியலமைப்புக்கான பத்தொன்பதாம் திருத்தம்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பைத்**
**திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 58.00** **தபாற் செலவு : ரூபா 40.00**

## அரசியலமைப்புக்கான பத்தொன்பதாம் திருத்தம்

ச.வ.ஒ. 20/2015

### இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

**1.** (1) இச்சட்டம், அரசியலமைப்புக்கான பத்தொன்பதாம் திருத்தம் என எடுத்துக்காட்டப்படலாம்–

(2) இச்சட்டத்தின் பிரிவுகள் 3, 4, 5, 6, 7, 8, 9 (46 ஆம் உறுப்புரையின் (1) ஆம் பிரிவு தவிர்ந்த) 11, 17, 19, 20, 21, 23, 33, 34, 35, 36, 37 மற்றும் 38 என்பன 2015 ஏப்பிறல் 22 ஆந் தேதி வலுவுக்கு வருதல் வேண்டுமென்பதுடன், ஏனைய ஏற்பாடுகள் இச்சட்டம் வலுவுக்கு வருந் தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் 11 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், அவை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 46 ஆம் உறுப்புரையின் முதலாம் பந்தி தொடர்புபடும் அளவுவரை, இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியின் பின்னர் உடனடியாக நடைபெறும் பொதுத் தேர்தலின் முடிவின் மீது நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பில் 14அ என்னும் புதிய உறுப்புரையை உட்புகுத்துதல்.*

**2.** (இதனகத்துப் பின்னர் "அரசியலமைப்பு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 14ஆம் உறுப்புரையினை உடனடத்துப் பின்வரும் புதிய உறுப்புரை இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது அரசியலமைப்பின் 14அ என்னும் உறுப்புரையாகப் பயனுறுதலும் வேண்டும்:–

2-PL 008847 -425 (2015/03)

“14அ தகவலைப் பெறுவதற்கான உரிமை.

(1) ஒவ்வொரு பிரசையும் பிரசையொருவரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அல்லது பிரயோகிப்பதற்கு தேவைப்படுவதும் பின்வருபவர்களினால் வைத்திருக்கப்படுவதுமான தகவலைப் பெறுவதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) அரசினால், அமைச்சினால் அல்லது ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தினால் அல்லது ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் நியதிச்சட்டக்குழு;

(ஆ) மாகாண சபையொன்றின் ஏதேனும் அமைச்சு அல்லது மாகாண சபையொன்றின் நியதிச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நியதிச்சட்டக்குழு;

(இ) ஏதேனும் உள்ளூரதிகாரசபை; அத்துடன்

(ஈ) வேறு எவரேனும் ஆள்.

(2) ஒழுங்கின்மையை அல்லது குற்றத்தினைத் தடுப்பிற்கென, ஆரோக்கியம் மற்றும் ஒழுக்கங்களின் பாதுகாப்பிற்கென, மற்றவர்களின் நற்கீர்த்தியை, அல்லது உரிமைகளைப் பாதுகாப்பதற்கென அல்லது அந்தரங்க தன்மையினைப் பாதுகாப்பிற்கென, நம்பகத் தன்மையில் பெறப்பட்ட தகவலின் வெளிப்படுத்துகையின் தடுப்பிற்கென அல்லது நீதித்துறையின் அதிகாரத்தையும் பக்கச் சார்பற்ற தன்மையையும் பேணுவதற்கென தேசிய பாதுகாப்பு, ஆள்புல ஒருமைப்பாடு அல்லது பொதுமக்கள் பாதுகாப்பு நலன் கருதி சனநாயக சமூகமொன்றில் அவசியமாகக் கூடியவாறாக சட்டத்தினால் விதித்துரைக்கப்படும் அத்தகைய மட்டுப்பாடுகள் தவிர்ந்த மட்டுப்பாடுகள் எதுவும், இவ்வுறுப்புரையினால் பிரகடனம் செய்து அங்கீகரிக்கப்படும் உரிமை மீது இடப்படுதல் ஆகாது.

(3) இவ் உறுப்புரையில் ''பிரசை'' என்பது ஏதேனும் சட்டத்தினால் அல்லது ஏதேனும் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழு ஒன்றை அல்லது கூட்டிணைக்கப்படாத குழுவொன்றை அத்தகைய குழுவின் நான்கில் மூன்று உறுப்பினர்களுக்குக் குறையாத உறுப்பினர்கள் பிரசைகளாக இருப்பின் அதையும் உள்ளடக்குகின்றது.''.

*அரசியலமைப்பின் 30 ஆம் உறுப்புரையை மாற்றீடு செய்தல்.*

**3**. அரசியலமைப்பின் 30ஆம் உறுப்புரை, இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உறுப்புரை இத்தால் இடப்படுகின்றது.

''(1) இலங்கை குடியரசுக்கு சனாதிபதி ஒருவர் இருத்தல் வேண்டும். அவரே அரசின் தலைவராகவும், ஆட்சித் துறையினதும் அரசாங்கத்தினதும் தலைவராகவும், ஆயுதந் தாங்கிய படைகளின் படைத் தலைவராகவும் இருத்தல் வேண்டும்.

(2) குடியரசின் சனாதிபதி மக்களினால் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், ஐந்து ஆண்டுகள் கொண்டதொரு காலப்பகுதிக்குப் பதவி வகித்தலும் வேண்டும்.

**4**. அரசியலமைப்பின் 31ஆம் உறுப்புரை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

*அரசியலமைப்பின் 31 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

(1) இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

''(2) சனாதிபதி பதவிக்கு மக்களால் இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஆள் எவரும், அதன் பின்னர் அத்தகைய பதவிக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகைமையுடையவராகார்.

(2) அவ்வுறுப்புரையின் (3அ) என்னும் பந்தியில் -

(அ) (i) அப்பந்தியின் (அ) (i) என்னும் உட்பந்தியில் "அவரது நடப்புப் பதவிக்காலம் தொடங்கியதிலிருந்து" என்றும் சொற்களுக்குப் பதிலாக, "அவரது முதலாவது பதவிக்காலம் தொடங்கியதிலிருந்து" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ii) உட்பந்தி (அ)(i)வுக்கான காப்புவாசகத்தை நீக்குவதன் மூலமும்.

(ஆ) (1) அவ்வுறுப்புரையின் (3அ) என்னும் பந்தியின் (இ) என்னும் உட்பந்தியின் (iii) என்னும் விடயத்தினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தினை இடுவதன் மூலமும்:-

"(iii) உட்பந்தி (i) இல் குறிப்பீடு செய்யப்பட்ட இறப்பின் காரணத்தால் சனாதிபதி பதவியில் வெற்றிடம் ஒன்று ஏற்பட்டால் சபாநாயகர் அத்தகைய வெற்றிடம் ஏற்பட்ட காலத்திற்கும் புதிய சனாதிபதி பதவி ஏற்கின்ற காலத்திற்கும் இடையிலான காலத்தின் போது சனாதிபதி பதவியில் பதிற் கடமையாற்றுதல் வேண்டும்:

ஆயின், அந்நேரத்தில் சபாநாயகரின் பதவியில் வெற்றிடம் இருக்குமெனின், அல்லது சபாநாயகர் பதிற் கடமையாற்றுவதற்கு இயலாதவராக இருப்பின் சனாதிபதி பதவியில் பிரதிச்சபாநாயகர் பதிற் கடமையாற்றுதல் வேண்டும்.".

(இ) அப்பந்தியின் (ஈ) என்னும் உட்பந்தியில், அவ்வுட்பந்தியில் "ஆறாண்டுகள் கொண்ட தவணையொன்றுக்கு" என்னும் சொற்கள் காணப்படும் இடங்களிலெல்லாம் "ஐந்தாண்டு

கள் கொண்ட தவணையொன்றுக்கு'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

(3) அவ்வுறுப்புரையின் (4)ஆம் பந்திக்கான காப்பு வாசகத்தில் (ஆ) மற்றும் (இ) பந்திகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும்:-

''(ஆ) பதவியில் இருக்கும் சனாதிபதியானவர், சனாதிபதி ஒருவரை தேர்ந்தெடுப்பதற்கான வாக்கெடுப்பொன்றில் வேட்பாளர் ஒருவராக இல்லாதவிடத்து அல்லது மீளத் தேர்ந்தெடுக் கப்படாதுள்ளவிடத்து, அவரது பதவிக் காலம், அத்தகைய தேர்தல் முடிவு வெளிப்படுத்தப்படும் தேதியன்று முடிவடைந்துள்ளதாக கருதப்படல் வேண்டும். அத்தகைய தேர்தலில் சனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்படும் ஆள், உடனடியாக ஆனால், அத்தகைய தேதியிலிருந்து இரண்டு வாரங்க ளுக்குப் பிந்தாமல் பதவியேற்றல் வேண்டும் ;

ஆயின், பதவியிலிருக்கும் சனாதிபதி, 30ஆம் உறுப்புரையில் முரணாக எது எவ்வாறிருப்பினும், சனாதிபதி பதவிக்குரிய தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவரென வெளிப்படுத்தப் பட்டுள்ள ஆள் பதவி ஏற்கும் வரை, தொடர்ந்து பிரயோகித்தலும் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும். சனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட வரென வெளிப்படுத்தப்பட்ட ஆள் பதவி ஏற்கத் தவறியமை காரணமாக சனாதிபதி பதவியில் வெற்றிடம் இருக்குமெனில், சபாநாயகர் அல்லது அந்நேரத்தில் சபாநாயகர் பதவியில் வெற்றிடம் இருக்குமெனில் அல்லது சபாநாயகர் பதிற்கடமை யாற்றுவதற்கு இயலாதவராக இருந்தால் பிரதிச்

சபாநாயகர் பதவியில் பதிற்கடமையாற்றத் தொடங்கும் வரை சனாதிபதி, பதவியின் தத்துவங் கள், கடமைகள், மற்றும் பணிகளை தொடர்ந்து பிரயோகித்தலும் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும் ;

(இ) உட்பந்தி (அ) வில் குறிப்பீடு செய்யப்பட் டுள்ள இறப்பின் காரணத்தால் சனாதிபதி பதவியில் வெற்றிடம் ஒன்று இருக்குமெனில் சபாநாயகர் அத்தகைய வெற்றிடம் ஏற்பட்ட காலத்திற்கும் புதிய சனாதிபதி பதவி ஏற்கின்ற காலத்திற்கும் இடையிலான காலப்பகுதியின் போது சனாதிபதி பதவியில் பதிற்கடமையாற்றல் வேண்டும்:

ஆயின், அந்நேரத்தில் சபாநாயகர் பதவியில் வெற்றிடம் இருக்குமெனில், அல்லது சபாநாயகர் பதிற்கடமையாற்றுவதற்கு இயலாதவராக இருப்பார் எனின், சனாதிபதி பதவியில் பிரதிச் சபாநாயகர் பதிற் கடமையாற்றுதல் வேண்டும்.

*அரசியலமைப் பின் 33 ஆம் உறுப்புரையை மாற்றீடு செய்தல்.*

**5**. அரசியலமைப்பின் 33ஆம் உறுப்புரை இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உறுப்புரை இடப்படுகின்றது:-

*“சனாதிபதியின் தத்துவங்கள் கடமைகள் பணிகள்.*

33. (1) சனாதிபதி தேசிய ஒற்றுமையின் சின்ன மாக இருத்தல் வேண்டும்.

(2) சனாதிபதியின் கடமைகள் பின்வருவனவா தல் வேண்டும் -

(அ) அரசியலமைப்பு, எல்லா அரச கருவிக ளாலும் மதிக்கப்பட்டு பின்பற்றப்படு தலை உறுதிப்படுத்தல்;

(ஆ) மதம்சார் மற்றும் இனம்சார் ஒற்றுமை பேணப்படுதலை உறுதிப்படுத்துதலும் வசதியளித்தலும் ;

(இ) தேசிய நல்லிணக்கம் மற்றும் ஒருமைப் பாட்டை மேம்படுத்துதல் ;

(ஈ) அரசியலமைப்புப் பேரவை மற்றும் VIIஅ என்னும் அத்தியாயத்தில் குறிப்பீடு செய்யப்படும் நிறுவனங்களின் முறையான செயற்பாட்டை உறுதிப் படுத்துதலும் வசதியளித்தலும்.

(உ) தேர்தல் ஆணைக்குழுவின் ஆலோசனை யின் மீது சுதந்திரமானதும் நியாயமான துமான தேர்தல்களும் மக்கள் தீர்ப்பும் நடைபெறுவதற்கான உகந்த நிபந்தனை கள் உருவாக்கப்படுதலை உறுதி செய் தல்.”.

(3) அரசியலமைப்பினால் அல்லது வேறேதே னும் எழுத்திலான சட்டத்தினால் சனாதிபதிக்கு வெளிப்படையாக அளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட குறித்தொதுக்கப்பட்ட தத்துவங் களுக்கும், கடமைகளுக்கும் பணிகளுக்கும் மேலதிக மாக சனாதிபதி பின்வரும் தத்துவங்களை உடைய வராதல் வேண்டும் -

(அ) பாராளுமன்றத்தின் அமர்வு ஒவ்வொன் றினதும் ஆரம்பத்திலும் பாராளுமன் றத்தின் அரசகொள்கைக் கூற்றை வாசித் தல் ;

(ஆ) பாராளுமன்றத்தின் சடங்குமுறையான இருக்கைகளில் தலைமைதாங்குதல்;

(இ) பாராளுமன்றத்தைக் கூட்டுதல், அமர்வு நிறுத்தல் அல்லது கலைத்தல் ;

(ஈ) அரச தூதுவர்கள், உயர் ஆணையாளர்கள், பூரண அதிகாரம் பெற்ற அரசுப் பிரதிநிதிகள், ஏனைய இராஜதந்திர முகவர்கள் என்போரை ஏற்று அங்கீகரிப்பதற்கும் அவர்களை நியமித்துப் பொறுப்பளிப்பதற்கும்;

(உ) உயர் தொழிலில் பிரபலம் அடைந்துள்ளவர்களாகவும் உயர்ந்த நடத்தையையும் உயர்தொழிலில் நேர்மையையும் பேணி வந்துள்ளவர்களாகவும் இருக்கின்ற சட்டத்தரணிகளை சனாதிபதி வழக்குரைஞர்களாக நியமிப்பதற்கும் இப்பந்தியின் கீழ் நியமிக்கப்படும் சனாதிபதி வழக்குரைஞர் ஒவ்வொருவரும் இராணி வழக்குரைஞர் ஒருவரால் இதுவரை அனுபவிக்கப்பட்டு வந்துள்ளவையான அத்தகைய எல்லா சிறப்புரிமைகளுக்கும் உரித்துடையவராதல் வேண்டும்;

(ஊ) குடியரசின் பொது இலச்சினையைக் காப்பில் வைத்திருப்பதுடன், பிரதம அமைச்சரினதும் அமைச்சரவையின் அமைச்சர்களினதும், பிரதம நீதியரசரினதும் உயர் நீதிமன்றத்தின் ஏனைய நீதிபதிகளினதும், மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரினதும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ஏனைய நீதிபதிகளினதும் நியமனப்பத்திரங்கள், குடியரசிற்கு உரித்தாக்கப்பட்டுள்ளனவும், வழங்கும்படியும், கையளிக்கும்படியும் சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டுள்ள அல்லது சனாதிபதி தத்துவம் அளிக்கப்பட்டுள்ளனவுமான காணி வழங்கல்கள், காணிக் கையளிப்புக்கள்,

அசைவற்ற ஆதனவழங்கல்கள், அசைவற்ற ஆதனக் கையளிப்புக்கள் ஆகியவற்றைப் பொது இலச்சினையின் கீழ் செய்வதற்கும் நிறைவேற்றுவதற்கும், அந்த இலச்சினை பொறிக்கப்பட வேண்டிய எல்லா ஆவணங்களிலும் இலச்சினையிடுவதற்கும் இலச்சினையை பயன்படுத்துவதற்கும் ;

(எ) போர், சமாதானம் என்பவற்றைப் பிரகடனஞ் செய்வதற்கும் ; அத்துடன்

(ஏ) அவராற் செய்யப்படவேண்டுமென நாட்டிடைச் சட்டத்தினால், வழங்காறினால், அல்லது வழமையினால் தேவைப்படுத்தப்படுவனவும் அல்லது அதிகாரமளிக்கப்படுவனவும், அரசியலமைப்பின் அல்லது எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாய் இராதனவும் ஆன அத்தகைய எல்லாச் செயல்களையும் காரியங்களையும் செய்வதற்கும்.".

அரசியலமைப்பின் 33அ என்னும் உறுப்புரையை உட்புகுத்தல்.

**6**. அரசியலமைப்பின் 33ஆம் உறுப்புரையை உடனடுத்துப் பின்வரும் புதிய உறுப்புரை இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அரசியலமைப்பின் 33அ என்னும் உறுப்புரையாகப் பயனுறுதலும் வேண்டும் -

"சனாதிபதியின் பொறுப்பு.

33அ. சனாதிபதி அரசியலமைப்பின் கீழும் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு பற்றிய அப்போதுள்ள சட்டம் உட்பட எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் கீழும் தமது தத்துவங்களையும் கடமைகளையும் மற்றும் பணிகளையும் உரியமுறையில் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் மற்றும் நிறைவேற்றுவதற்கும் பாராளுமன்றத்திற்கு பொறுப்பாதல் வேண்டும்.".

**7**. அரசியலமைப்பின் 35ஆம் உறுப்புரை இத்தால் நீக்கப்பட்டு அதற்குப்பதிலாகப் பின்வரும் உறுப்புரை இடப்படுகின்றது.

*அரசியலமைப் பின் 35 ஆம் உறுப்புரையை மாற்றீடு செய்தல்.*

*"சனாதிபதிக்கு எதிராக வழக்கு தொடுக்க முடியா தென்பது.*

35. (1) எவரேனுமாள் சனாதிபதி என்ற பதவியை வகிக்கின்ற போது, அவரது பதவி முறையில் அல்லது தனிப்பட்ட முறையில் அவரால் செய்யப்பட்ட அல்லது செய்யாதுவிடப்பட்ட எவ்விடயம் தொடர்பிலும் சனாதிபதிக்கு எதிராக குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு எதுவும் தொடுக்கப்படுதல் அல்லது தொடர்ந்து நடாத்தப்படுதல் ஆகாது:

ஆயின், இப்பந்தியிலுள்ளது எதுவும் சனாதிபதியால் தமது பதவிமுறையில் அவரால் அல்லது அவளால் செய்யப்பட்ட அல்லது செய்யாது விடப்பட்ட எவ்விடயம் தொடர்பிலும் 126 ஆம் உறுப்புரையின் கீழ் சட்டத்துறை தலைமையதிபதிக்கு எதிராக தோதான வழக்கு நடவடிக்கையைத் தொடுப்பதற்கு எவரேனுமாளுக்குள்ள உரிமையை மட்டுப்படுத்துவதாக வாசித்துப் பொருள் கொள்ளப்படுதல் ஆகாது.

ஆயின் மேலும் 33(எ) என்னும் உறுப்புரையின் கீழ் சனாதிபதியால் பிரயோகிக்கப்படும் தத்துவங்கள் மீது எதனையும் தீர்ப்பிட உயர்நீதிமன்றம் நியாயாதிக்கம் உடையதல்ல.

(2) எவரேனுமாளுக்கு எதிராக எவ்விவரணத்திலுமான வழக்கு நடவடிக்கை எடுக்கப்படுவதற்கான கால எல்லையை வரையறுத்துச் சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவிடத்து, அச்சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதி எதனையும் கணிப்பதில் அத்தகைய ஆள் இலங்கைக் குடியரசின் சனாதிபதிப் பதவியை வகிக்கின்ற காலப்பகுதி கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுதல் ஆகாது.

(3) இவ்வுறுப்புரையின் (1)ஆம் பந்தியின் ஏற்பாடுகளினால் அளிக்கப்பட்ட விடுபாட்டுரிமை 130(அ) என்னும் உறுப்புரையின் கீழ் சனாதிபதித் தேர்தல் தொடர்பில் அல்லது மக்கள் தீர்ப்பொன்றின் வலிதுடைமை தொடர்பில் உயர்நீதி மன்றத்தின் கீழான வழக்கு நடவடிக்கைகளுக்கு ஏற்புடையதாதல் ஆகாது.

*அரசியலமைப்பின் 37 ஆம் உறுப்புரையை மாற்றீடு செய்தல்.*

**8**. அரசியலமைப்பின் 37ஆம் உறுப்புரை இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உறுப்புரை இடப்படுகின்றது:

"பதிற்கடமை யாற்றும் சனாதிபதி

37. (1) சனாதிபதி, சுகவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக, அல்லது வேறேதேனும் ஏதுவின் காரணமாக, சனாதிபதிப் பதவியின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகிப்பதற்கு புரிவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு இயலாமலிருக்குமிடத்து அத்தகைய காலப்பகுதியின் போது சபாநாயகர் சனாதிபதி பதவியில் பதிற் கடமையாற்றுதல் வேண்டும். சபாநாயகர் பதவியில் வெற்றிடமிருக்குமெனில் அல்லது அவர் பதிற்கடமையாற்ற இயலாதவராக இருப்பின் பிரதிச்சபாநாயகர் சனாதிபதிப் பதவியில் பதிற்கடமையாற்றுதல் வேண்டும்.

(2) அரசியலமைப்பின் ஏற்பாடுகள் (32 ஆம் உறுப்புரையின் 2ஆம் பந்தியின் ஏற்பாடுகள் தவிர) சனாதிபதி பதவியில் பதிற் கடமையாற்றுகின்ற ஆள் ஒருவருக்கு அவை ஏற்புடையதாகக் கூடிய அந்த அளவிற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்".

*அரசியலமைப்பின் 39 ஆம், 40 ஆம் உறுப்புரைகளை மாற்றீடு செய்தல்.*

**9**. அரசியலமைப்பின் 39ஆம், 40ஆம் உறுப்புரைகள் இத்தால் நீக்கப்பட்டு அவற்றுக்குப் பதிலாக பின்வரும் உறுப்புரைகள் இடப்படுகின்றன.

“சனாதிபதி உரிய முறையாகத் தேர்ந்தெடுக்கப் படவில்லையென உயர் நீதி மன்றத்தால் தீர்மானிக்கப் படுதல்.

39. (1) உயர் நீதிமன்றமானது, 130ஆம் பிரிவின் கீழான தனது நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கு மிடத்து –

(அ) சனாதிபதித் தேர்தல் வறிதானதெனவும் வேறெவரேனுமாள் முறையாகத் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளார் என தீர்மானிக் காதவிடத்தும், அப்போது வெற்றிட மொன்று சனாதிபதி பதவியில் ஏற்பட்டி ருப்பதாக கருதப்படல் வேண்டும். அத்து டன் அத்தகைய தீர்மானத் தேதியிலி ருந்து ஒருமாதத்திற்கு பிந்தாமல், தேர்தல் ஒன்று 40ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடாத்தப் படுதல் வேண்டும் ; அல்லது

(ஆ) வேறெவரேனும் ஆள் சனாதிபதியாக உரியமுறையில் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்று தீர்மானிக்கின்றவிடத்து, அப் போது அத்தகைய வேறு ஆள் அத்த கைய தீர்மானத் தேதியிலிருந்து ஒரு மாதத்தினுள் சனாதிபதி பதவியை ஏற் றல் வேண்டும்

(2) இவ்வுறுப்புரையின் (1)ஆம் பந்தியின் (அ1) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட வாறாக ஏதேனும் அத்தகைய தீர்மானத்தை உயர்நீதிமன்றம் ஆக்குவதன் மேல், சனாதிபதி பதவியின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகித்துக் கொண்டிருந்த, புரிந்துகொண்டிருந்த மற்றும் நிறைவேற்றிக் கொண்டிருந்த ஆள் அத்தகைய தத்துவங்கள் கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகிப்பதை, புரிவதை மற்றும் நிறைவேற்றுவதை விட்டொழிதல்

வேண்டும். அத்தகைய தீர்மானத் தேதிக்கும் புதிய சனாதிபதியினால் பதவியை ஏற்பதற்கும் இடையிலான இடையீட்டுக்காலப்பகுதியின் போது சபாநாயகர், சனாதிபதி பதவியில் பதிற்கடமை யாற்றுதல் வேண்டும்:

ஆயின் சபாநாயகர், பதவியில் வெற்றிட மிருப்பின், அல்லது சபாநாயகர், பதிற்கடமை யாற்ற இயலாதவராக இருப்பின் பிரதிச் சபாநாய கர் சனாதிபதி பதவியில் பதிற்கடமையாற்றுதல் வேண்டும்.

(3) 31ஆம் உறுப்புரைய (4)இன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், 30(2)ஆம் உறுப்புரையின் நோக்கங்களுக்காக புதிய சனாதிபதியின் பதவிக் காலமானது, எந்த ஆளின் தேர்தல் வறிதானதாக அல்லது முறையற்றதாகத் தீர்மானிக்கப்பட்டதோ அந்த ஆளின் பதவிக்காலம் அத்தகைய தீர்மானம் செய்யப்படாவிடின் எத்தேதியன்று தொடங்கி யிருக்குமோ அத் தேதியன்று தொடங்கியிருப்பதாக கருதப்படுதல் வேண்டும்.

(4) சனாதிபதி பதவிக்குரிய தத்துவங்களும் கடமைகளும் பணிகளும் எவரேனுமாளினால் பிரயோகிக்கப்படுதலும் புரியப்படுதலும் நிறைவேற் றப்படுதலும், அத்தகைய ஆள் சனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டமை வறிதானதென அல்லது முறையற்றதானதென உயர்நீதிமன்றம் பின்னர் தீர்மானித்தது என்ற காரணத்தினால் மட்டும் செல்லுபடியற்றனவாதல் ஆகாது.

(5) 40ஆம் உறுப்புரையில் முரணாக எது எவ்விதம் இருப்பினும் இந்த உறுப்புரையின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

சனாதிபதி பதவியை வறிதாக்கலும் அடுத்துவரும் சனாதிபதியை தேர்ந்த் தெடுத்தலும்.

40. (1) (அ) சனாதிபதியின் பதவி அவரது அல்லது அவளது பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்பாக வறிதாகினால், பாராளுமன்றம் சனாதி பதிபதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகமை யுடையவராயுள்ள பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரைச் சனாதிபதியாக தேர்ந்தெடுத்தல் வேண் டும். அங்ஙனம் சனாதிபதி பதவியை அடுத்துறு கின்ற ஆள் எவரும், பதவியை வறிதாகச் செல்லும் சனாதிபதியின் பதவிக்காலத்தின் முடிவுறா தெஞ்சியுள்ள காலத்துக்கு மட்டுமே பதவி வகித்தல் வேண்டும்.

(ஆ) அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கான தேர்தல், வெற்றிடம் ஏற்பட்ட பின்னர் இயன்றளவு விரைவாகவும், எச்சந்தர்ப்பத்திலும் அத்தேதி யிலிருந்து ஒரு மாதத்திற்குப் பிந்தாமலும் நடாத் தப்படுதல் வேண்டும். பாராளுமன்றம் சட்டத்தி னால் ஏற்பாடு செய்யக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கை முறைக்கிணங்க அத்தகைய தேர்தல், இரகசிய வாக்களிப்பு மூலமும் அளிக்கப்பட்ட வாக்குகளின் பூரண பெரும்பான்மை மூலமும் நடைபெறுதல் வேண்டும்:

ஆயின், அத்தகைய வெற்றிடம், பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் பின்னர் ஏற்பட்டால், சனாதிபதியானவர், புதிய பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டம் நடைபெற்ற தேதியிலிருந்து ஒரு மாத காலத்துள் பாராளுமன்றத்தினால் தேர்ந் தெடுக்கப்படுதல் வேண்டும்.

(இ) அத்தகைய வெற்றிடம் ஏற்பட்ட காலத் திற்கும் புதிதாக சனாதிபதி பதவியேற்கின்ற காலத் திற்கும் இடைப்பட்ட காலத்தின்போது சனாதிபதி பதவியில் சபாநாயகர் பதிற்கடமையாற்றுதல் வேண்டும் :

ஆயின், சபாநாயகர் பதவி அந்நேரத்தில் வெற்றிடமாகவிருப்பின் அல்லது சபாநாயகர் பதிற்கடமையாற்ற இயலாதவராக இருப்பின் பிரதிச்சபாநாயகர் சனாதிபதி பதவியில் பதிற் கடமையாற்றுதல் வேண்டும்.

(2) சனாதிபதி பற்றிய அரசியலமைப்பின் ஏற்பாடுகள் (32ஆம் உறுப்புரையின் 2ஆம் பந்தியின் ஏற்பாடுகள் நீங்கலாக) ஏற்புடைய தாக்கக் கூடியளவிற்கு பதிற்கடமையாற்றுதல் சனாதிபதிக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) சனாதிபதியை பாராளுமன்றம் தேர்ந்தெடுத் தலுக்கான நடவடிக்கை முறைபற்றிய எல்லா கருமங்களுக்கும் அல்லது அவற்றுக்கு அவசிய மான அல்லது அவற்றின் இடைநேர்விளைவான ஏனைய எல்லாக் கருமங்களும் சட்டத்தின் மூலம் பாராளுமன்றம் ஏற்பாடு செய்தல் வேண்டும். பாராளுமன்றம் அவ்வாறு ஏற்பாடு செய்யும் வரை 1981ஆம் ஆண்டு 2ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள் சட்டம்) அத்த கைய தேர்தலுக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.".

*அரசியலமைப் பின் VIIஅ என்னும் அத்தியாயத் தினை மாற்றீடு செய்தல்.*

**10**. அரசியலமைப்பின் VIIஅ என்னும் அத்தியாயம் இத்தால் நீக்கம் செய்யப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் அத்தியாயம் இடப்படுகின்றது:-

"அத்தியாயம் VII அ

**அரசியலமைப்புப் பேரவை**

*அரசியலமைப்புப் பேரவையின் அமைப்பு.*

41அ. (1) பின்வரும் உறுப்பினர்களைக் கொண் டிருக்க வேண்டிய (இவ் அத்தியாயத்தில் "பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அரசியலமைப்புப் பேரவையொன்று இருத்தல் வேண்டும்:-

(அ) பிரதம அமைச்சர்;

(ஆ) சபாநாயகர்;

(இ) பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர்;

(ஈ) சனாதிபதியினால் நியமிக்கப்படும் ஒருவர்:

(உ) பிரதம அமைச்சரினாலும் எதிர்க்கட்சித் தலைவரினாலும் பெயர் குறித்து நியமிக்கப் படுவதன் மீது சனாதிபதியினால் நியமிக்கப் படும் ஐந்து ஆட்கள் ; அத்துடன்

(ஊ) பிரதம அமைச்சரும் எதிர்கட்சித் தலைவரும் முறையே எந்த அரசியற் கட்சிகளை அல்லது சுயேட்சைக் குழுக்களைச் சேர்ந்துள்ளார்களோ அந்த அரசியற் கட்சிகள் அல்லது சுயேட்சைக் குழுக்கள் அல்லாத அரசியற் கட்சிகளை அல்லது சுயேட்சைக் குழுக்களைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மையோரின் உடன்படிக்கையின் மீது பெயர் குறிக்கப் பட்டு சனாதிபதியினால் நியமிக்கப்படும் ஒருவர்;

(2) சபாநாயகர் பேரவையின் தவிசாளர் ஆதல் வேண்டும்.

(3) இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் உட்பந்தி (உ) அல்லது (ஊ) என்பதன் கீழ் நியமனங்கள் பெயர்குறித்த நியமனங்களுக்கான தேவை ஏற்பட்டதும் இயன்றளவு விரைவில் செய்யப்படுவதனை உறுதிப்படுத்துதல் சபாநாயகரின் கடமையாதல் வேண்டும்.

(4) இவ் உறுப்புரையின் (1)ஆம் பந்தியின் (உ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஐந்து ஆட்களை நியமிக்கையில் பிரதம அமைச்சரும், எதிர்க்கட்சித் தலைவரும், அரசியலமைப்பு பேரவை உயர்தொழில் மற்றும் வேறுபட்ட சமூகங்கள் உள்ளிட்ட இலங்கை சமூகத்தினரின் பல்லின சமுதாயங்களைப் பிரதிபலிக்கின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கென பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கின்ற அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்களது தலைவர்களைக் கலந்தாலோசித்தல் வேண்டும்.

(5) இவ்வுறுப்புரையின் (1)ஆம் பந்தியின் (ஈ), (உ) மற்றும் (ஊ) என்னும் உட்பந்திகளின் கீழ் நியமிக்கப்படும் அல்லது பெயர் குறித்து நியமிக்கப்படும் ஆட்கள் பகிரங்க வாழ்வில் அல்லது உயர்தொழிலில் தமக்கென்று சிறந்த நிலையை ஏற்படுத்திக்கொண்ட கீர்த்தி வாய்ந்தவர்களும் நேர்மையுடையவர்களும் அத்துடன் ஏதேனும் அரசியற் கட்சியின் உறுப்பினரல்லாதவர்களுமான ஆட்களாதல் வேண்டும்.

(6) சனாதிபதி, (1) ஆம் பந்தியின் (உ) மற்றும் (ஊ) என்னும் உட்பந்திகளின் கீழ் செய்யப்பட்ட பெயர் குறித்த நியமனங்களைக் குறித்துரைக்கின்ற எழுத்திலான தகவல் கிடைக்கப்பெற்று பதினான்கு நாட்களினுள் அவசியமான நியமங்களைச் செய்தல் வேண்டும். சனாதிபதி, அத்தகைய பதினான்கு நாள் காலப்பகுதியினுள் அவசியமான நியமனங்களை செய்யத்தவறும் பட்சத்தில், பெயர்குறித்து நியமிக்கப்பட்டோர், அத்தகைய காலப்பகுதி முடிவுற்ற தேதியிலிருந்து பயன்பட, பேரவையின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டவர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

(7) (அ) பாராளுமன்றம் கலைக்கப்படுவதன் மீது, அரசியலமைப்பின் 64 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், சபாநாயகர், மேற்கூறப்பட்ட உறுப்புரையின் (1)ஆம் பந்தியின்கீழ் பாராளுமன்ற உறுப்பின ரொருவர் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்படும் வரை, பேரவையின் உறுப்பினரொருவராகப் பதவியை தொடர்ந்து வகித்தல் வேண்டும்;

(ஆ) பாராளுமன்றம் கலைக்கப்பட்டமை எவ் வாறிருப்பினும், பிரதம அமைச்சரும் எதிர்க்கட்சித் தலைவரும் அத்தகைய கலைப்பைப் பின்பற்றிய பொதுத் தேர்தலின் பின்னராக பாராளுமன்றத் தில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் விடயத்திற் கேற்ப பிரதம அமைச்சராக நியமிக்கப்படும் அல் லது எதிர்க்கட்சித் தலைவராக அங்கீகரிக்கப்படும் அத்தகைய காலம்வரை, பேரவையின் உறுப்பினர் களாகப் பதவியைத் தொடர்ந்து வகித்தல் வேண் டும்.

(8) இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் (ஈ),(உ),(ஊ) என்னும் உட்பந்திகளின் கீழ் நியமிக் கப்படும் பேரவையின் ஒவ்வோர் உறுப்பினரும், அவர் அல்லது அவள் சனாதிபதிக்கு முகவரியிட்ட னுப்பும் எழுத்தின் மூலம் முன்னதாகவே அவரது அல்லது அவளது பதவியைத் துறந்தாலொழிய அல்லது பிரதம அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகிய இருவரும் அத்தகைய உறுப்பினர் பதவியில் மேற்கொண்டு பணியாற்றுவதற்கு இயலாதவராகவும் அத்துடன் உடல்ரீதியாக அல்லது உளரீதியாக இயலாதவராகவும் உள்ளார் என அபிப்பிராயம் கொள்ளுவதன் மீது சானாதி பதியால் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய அல்லது ஒழுக்கக்கேட்டை உட்படுத்துகின்ற ஏதே னும் தவறுக்கு நீதிமன்றம் ஒன்றினால் அவருக்குத்

குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருந்தாலொழிய, அல்லது அரசியலமைப்பின் 81 ஆம் உறுப்புரையின் நியதிகளின் படி அவர் அல்லது அவள் மீது குடியியற்றகுதியீனத்தை விதிப்பதற்கான தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டிருந்தாலொழிய அல்லது 41 (உ) என்னும் உறுப்புரையின் (7) ஆம் பந்தியின் கீழ் அவருடைய அல்லது அவளுடைய பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்பட்டாலொழிய, அவர் அத்தகைய உறுப்பினராக நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்தாண்டுக் காலப்பகுதியொன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(9) இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் (ஈ) என்னும் உட்பந்தியின் கீழ் அல்லது (உ) என்னும் உட்பந்தியின் அல்லது கீழ் (ஊ) என்னும் உட்பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களிடையே வெற்றிடமொன்று ஏற்படும் பட்சத்தில், சனாதிபதி, அத்தகைய வெற்றிடமேற்பட்டு இருகிழமைக்குள்ளாகவும் அத்துடன் மேற்சொல்லப்பட்ட உட்பந்திகளின் ஏற்பாடுகளைக் கருத்திற்கெடுத்தும், அத்தகைய உறுப்பினரை அடுத்துப்பின்னுறுவதற்கென வேறோர் ஆளை நியமித்தல் வேண்டும். அவ்வாறு நியமிக்கப்படும் எவரேனுமாள், அவர் அல்லது அவள் எவ்வுறுப்பினரை அடுத்துப் பின்னுறுகின்றாறோ அவ்வுறுப்பினரின் பதவிக் காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதியின் போது பதவிவகித்தல் வேண்டும்.

(10) இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் (ஈ) என்னும் உட்பந்தியின் கீழ் (உ) என்னும் உட்பந்தியின் கீழ் (ஊ) என்னும் உட்பந்தியின் கீழ் நியமிக்கப்படும் உறுப்பினரொருவர், அந்த உட்பந்திகளின் கீழ் மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராகலாகாது.

(11) இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் (ஈ) என்னும் உட்பந்தியின், கீழும் (உ) என்னும் உட்பந்தியின் கீழும் (ஊ) என்னும் உட்பந்தியின் கீழும் சனாதிபதியினால் செய்யப்படும் நியமனங்கள் சபாநாயகருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

பேரவையானது நியமனங்களை விதைந் துரைத்தல்

41ஆ. (1) ஆளெவரும், பேரவையின் விதப்புரையொன்றின் மீதன்றி இவ்வுறுப்புரைக்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட ஆணைக்குழுக்களுள் எவற்றினதும் தவிசாளராக அல்லது உறுப்பினரொருவராக சனாதிபதியினால் நியமிக்கப்படலாகாது.

(2) இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகள், அத்தகைய ஆணைக்குழு எதனதும் தவிசாளராக அல்லது உறுப்பினரொருவராக பதில் கடமையாற்றுவதற்கு நியமிக்கப்பட்ட எவரேனுமாள் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) இவ்வுறுப்புரைக்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்படும் ஆணைக்குழுக்களின் தவிசாளர்களாக அல்லது உறுப்பினர்களாக நியமனம் செய்வதற்கான தகுதியான மற்றும் உகந்த ஆட்களை அத்தகைய நியமனத்துக்கான சந்தர்ப்பம் எழுகின்ற பொழுதெல்லாம் சனாதிபதிக்கு விதந்துரைத்தல் பேரவையின் கடமையாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய விதப்புரைகள், பால் சமத்துவம் உட்பட வெவ்வேறு பல்லின சமூகக்குழுக்களைப் பிரதிபலித் தலை உறுதிப்படுத்துவதற்கு முயற்சித்தலும் வேண்டும். அத்தகைய ஆணைக்குழுக்களின் தவிசாளர்களின் விடயத்தில், பேரவையானது நியமனம் செய்வதற்கான மூன்று ஆட்களை விதந்துரைத்தல் வேண்டுமென்பதுடன், சனாதிபதி விதந்துரைக்கப்பட்ட ஆட்களில் ஒருவரைத் தவிசாளராக நியமித்தலும் வேண்டும்.

(4) சனாதிபதி அத்தகைய நியமனங்களுக்கான பேரவையின் விதிப்புரைகளைப் பெற்றுக்கொண்ட பதின்நான்கு நாட்களினுள் இவ்வுறுப்புரைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஆணைக் குழுக்களின் தவிசாளர்களையும் உறுப்பினர் களையும் நியமித்தல் வேண்டும். சனாதிபதி, அத்தகைய 14 நாட்களுக்குள் அவசியமான நியமனங்களைச் செய்யத்தவறும் பட்சத்தில், விதந் துரைக்கப்பட்ட ஆட்கள், அத்தகைய காலப்பகுதி முடிவுற்ற காலப்பகுதியிலிருந்து பயன்பட-

(அ) (3) ஆம் பந்தியின் கீழ் விதந்துரைக் கப்பட்ட ஆட்கள் ஆணைக்குழுக்களின் உறுப்பினர் களாக நியமிக்கப்பட்டவர்களாகக் கருதப் படுதல் வேண் டும்; அத்துடன்

(ஆ) (3) ஆம் பந்தியின் கீழ் விதந்துரைக்கப்பட்ட பெயர்கள் பட்டியலில் எவரின் பெயர் முதலாவதாக உள்ளதோ அவர், ஆணைக் குழுவின் தவிசாளராகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின்கீழ் நியமிக்கப்படும் ஆளொருவர் அல்லது ஏதேனும் அத்தகைய ஆணைக்குழுவின் தவிசாளராக அல்லது உறுப்பினரொருவராகப் பதில் கடமை யாற்றவென நியமிக்கப்படும் ஆளொருவர், அரசியமைப்பில் அல்லது ஏதேனும் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர அகற்றப்படுதல் ஆகாது என்பதுடன், அத்தகைய ஏற்பாடெதுவும் செய்யப்பட்டிராதவிடத்து, பேரவையின் முன்னங்கீ காரத்துடன் மட்டுமே அத்தகைய ஆள் சனாதிபதி யினால் அகற்றப்படுதலும் வேண்டும்.

## அட்டவணை

(அ) தேர்தல் ஆணைக்குழு.

(ஆ) பகிரங்க சேவை ஆணைக்குழு.

(இ) தேசிய பொலிசு ஆணைக்குழு.

(ஈ) கணக்காய்வு சேவை ஆணைக்குழு.

(உ) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.

(ஊ) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த் துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு.

(எ) நிதி ஆணைக்குழு.

(ஏ) எல்லை நிர்ணய ஆணைக்குழு.

(ஐ) தேசிய பெறுகை ஆணைக்குழு.

(ஒ) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு.

(ஓ) அரசகரும மொழிகள் ஆணைக்குழு.

பேரவையானது நியமனங்களை அங்கீகரித்தல்.

41இ. (1) ஆளெவரும் இவ்வுறுப்புரைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட பதவிகளுள் எவற்றிற்கும், சனாதிபதியினால் பேரவைக்குச் செய்யப்படும் விதப்புரையின் மீது அத்தகைய நியமனம் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலொழிய, சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் ஆகாது.

(2) இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகள், இவ்வுறுப்புரைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பதவியில் பதின்நான்கு நாட்களை விஞ்சுமொரு காலப்பகுதிக்குப் பதில் கடமையாற்றுவதற்கென நியமிக்கப்படும் எவரேனும் ஆள் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்:

ஆயினும் ஆளெவரும் சனாதிபதியின் விதப்புரை ஒன்றின் மீது அத்தகைய பதில் நியமனம் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலொழிய பதின்நான்கு நாட்களை விஞ்சாத தொடர்ந்துவரும் காலப்பகுதிக்கு அத்தகைய ஏதேனும் பதவியில் பதில் கடமையாற்றுவதற்கு நியமிக்கப்படுதல் ஆகாது.

(3) இவ்வுறுப்புரைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பதவிக்கு நியமிக்கப்படும், அல்லது அத்தகைய ஏதேனும் பதவியில் பதில் கடமையாற்றவென நியமிக்கப்படும் ஆளொருவர் அரசியலமைப்பில் அல்லது ஏதேனும் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, அத்தகைய பதவியிலிருந்து அகற்றப்படுதல் ஆகாது.

(4) உயர் நீதிமன்ற நீதிபதிகளினதும், மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரினதும் நீதிபதிகளினதும் நியமனம் தொடர்பான அதன் பணியை பிரயோகிக்கையில் பேரவையானது, பிரதம நீதியரசரினதும் நீதி என்னும் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினதும் சட்டத்துறைத் தலைமையதிபதியினதும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தலைவரினதும் அபிப்பிராயங்களைப் பெறுதல் வேண்டும்.

## அட்டவணை

### பாகம் I

(அ) பிரதம நீதியரசரும் உயர்நீதிமன்ற நீதிபதிகளும்.

(ஆ) மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரும் நீதிபதிகளும்.

(இ) தவிசாளர் தவிர்ந்த நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்.

### பாகம் II

(அ) சட்டத்துறை - தலைமையதிபதி

(ஆ) கணக்காய்வாளர் - தலைமையதிபதி

(இ) பொலிசுப் பரிசோதகர் - தலைமையதிபதி

(ஈ) நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர். (ஓம்புட்சுமான்)

(உ) பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.

பேரவையின் செயலாளர் தலைமை அதிபதியும் ஏனைய அலுவலர்களும்.

41ஈ. (1) ஐந்து வருட காலப்பகுதியொன்றுக்கு பேரவையினால் நியமிக்கப்பட வேண்டியவரான பேரவைக்கான செயலாளர் - தலைமையதிபதியொருவர் இருத்தல் வேண்டும். அவருடைய அல்லது அவளுடைய பதவிக்காலம் முடிவடைவதன் மேல், செயலாளர் தலைமையதிபதி மீள நியமிப்பதற்கு தகுதியுடையவராதல் வேண்டும்.

(2) பேரவையானது, அதனால் தீர்மானிக்கப்பட வேண்டியனவான அத்தகை நியதிகள் நிபந்தனைகள் மீது அதனது பணிகளை நிறைவேற்றுவதற்காக அது அவசியமென கருதுகின்றவாறான அத்தகைய அலுவலர்களை நியமிக்கலாம்.

பேரவையின் கூட்டங்கள்.

41உ. (1) (i)பேரவையானது குறைந்தபட்சம் ஒவ்வொரு மாதமும் இரண்டு தடவையும் அத்துடன் இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளினால் அல்லது வேறேதேனும் சட்டத்தினால் பேரவைக்குக் குறித்தொதுக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறு அடிக்கடியும் கூடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கூட்டங்கள், பேரவையின் தவிசாளரது பணிப்பின் மீது பேரவையின் செயலாளர் - தலைமையதிபதியினால் கூட்டப்படுதலும் வேண்டும்.

(2) தவிசாளர் பேரவையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமை தாங்குதல் வேண்டுமென்பதுடன், தவிசாளர் வருகைதராதிருப்பின் பிரதம அமைச்சரும், பிரதம அமைச்சர் வருகைதராதிருப்பின் எதிர்க்கட்சித் தலைவரும் பேரவையின் கூட்டங்களுக்கு தலைமை தாங்குதலும் வேண்டும். தவிசாளர், பிரதம அமைச்சர் அத்துடன் எதிர்க்கட்சித் தலைவராகிய எல்லோரும் அத்தகைய ஏதேனும் கூட்டத்திற்கு வருகைதராதிருப்பின் சமுகமாயிருக்கும் உறுப்பினர்கள், தம்மிடையே யிருந்து உறுப்பினரொருவரை அத்தகைய கூட்டத்திற்குத் தலைமை தாங்கவெனத் தெரிவு செய்தல் வேண்டும்.

(3) பேரவையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும்.

(4) பேரவையானது, அது செய்ய தேவைப்படுத்தப்பட்ட ஒவ்வொரு விதப்புரையையும், அங்கீகாரத்தையும் அல்லது முடிவையும் ஏகமனதாகச் செய்வதற்கு முயற்சித்தல் வேண்டுமென்பதுடன், ஏகமனதான முடிபொன்று இல்லாதவிடத்து, பேரவையினால் செய்யப்பட்ட விதப்புரை, அங்கீகாரம் அல்லது முடிபு எதுவும் அத்தகைய கூட்டத்தில் சமுகமாயிருக்கும் பேரவை உறுப்பினர்களில் ஐந்து உறுப்பினர்களுக்குக் குறையாதோரினால் ஆதரவளிக்கப்பட்டாலொழிய, வலிதுடைதலுமாகாது.

(5) தவிசாளர் அல்லது தலைமை தாங்கும் ஏனைய உறுப்பினர் மூலவாக்கொன்றை உடையவராதல் ஆகாது, ஆனால், பேரவையின் ஏதேனும் கூட்டத்தில் முடிபுக்கான ஏதேனும் பிரச்சனையின் மீது வாக்குகள் சமமாக இருக்கும் பட்சத்தில் தவிசாளர் அல்லது அத்தகைய கூட்டத்திற்கு தலைமை தாங்குகின்ற வேறு உறுப்பினர் அறுதியிடும் வாக்கொன்றை கொண்டிருத்தல் வேண்டும்.

(6) உறுப்புரை 41ஆ இன் அல்லது உறுப்புரை 41இ இன் கீழான ஏதேனும் நியமனத்திற்குப் பொருத்தமான ஆட்களை விதந்துரைப்பது அல்லது அங்கீகரிப்பது தொடர்பில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறைகள் உட்பட, பேரவையின் கூட்டங்கள் மற்றும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக்கொண்டு நடாத்துதலும் தொடர்பான நடவடிக்கை முறை என்பன பேரவையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(7) உறுப்புரை 41அ இன் (1) ஆம் பந்தியின் (ஈ) என்னும் உட்பந்தியின், (உ) என்னும் உட்பந்தியின் அல்லது (உ) என்னும் உட்பந்தியின் கீழ் நியமிக்கப்பட்டவரும், பேரவையின் முன்கூட்டிய

அனுமதியின்றி பேரவையின் அடுத்தடுத்த மூன்று கூட்டங்களுக்கு வருகை தராதிருப்பவருமான பேரவையின் எவரேனும் உறுப்பினர் அத்தகைய கூட்டங்களுள் மூன்றாவது கூட்டத்தின் தேதியிலிருந்து பயனுறுவதாக பதவியை வறிதாக்கியுள்ளார் எனக் கருதப்படுதல் வேண்டும்.

(8) பேரவை, முழுமையாக அமைக்கப்படவில்லை அல்லது அதன் உறுப்பாண்மையில் வெற்றிடமொன்று உள்ளது என்பன எவை எப்படியிருப்பினும் செயலாற்றத் தத்துவமுடையதாகவிருத்தல் வேண்டும். அத்துடன் பேரவையின் செயல், நடபடி அல்லது முடிபு, எதுவும் பேரவை முழுமையாக அமைக்கப்படவில்லை அல்லது அதன் உறுப்பாண்மையில் வெற்றிடமொன்று உள்ளது அல்லது உறுப்பினர் ஒருவரது நியமனத்தில் குறைபாடுள்ளது என்னும் காரணத்தினால் வலிதற்றதாதலாகாது அல்லது வலிதற்றதாகக் கருதப்படுதலுமாகாது.

பேரவையின் உறுப்பினர்கள் பதவியில் தொடர்ந் திருத்தல்.

41ஊ. பேரவையின் உறுப்பினர்களின் அல்லது உறுப்புரை 41ஆ என்னும் உறுப்புரைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவுற்றது எது எப்படியிருப்பினும் பேரவையின் உறுப்பினர்கள் அல்லது அத்தகைய ஏனைய ஆணைக்குழுக்களின் உறுப்பினர்கள், பேரவையில் அல்லது அத்தகைய வேறு ஆணைக்குழுவில் புது உறுப்பினர்கள் பதவியேற்கும் வரை தொடர்ந்திருத்தல் வேண்டும்.

பேரவையின் தத்துவங்களும் கடமைகளும்.

41எ. (1) பேரவையானது, ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கொரு தடவை, முற்போந்த மூன்று மாதகாலப்பகுதியின்போதான அதன் செயற்பாடுகள் பற்றி ஓர் அறிக்கையை சனாதிபதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) பேரவையானது, அரசியலமைப்பால் அல்லது வேறேதேனும் சட்டத்தால் அதன் மீது சுமத்தப்படக்கூடியவறான அல்லது அதற்குக் குறித்தொதுக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு கடமைகளைப் புரிதலும் பணிகளை நிறைவேற்றுதலும் வேண்டும்.

(3) பேரவையானது, அதன் கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றுவதற்கும் புரிவதற்குமான விதிகளை ஆக்குவதற்கு தத்துவமுடையதாதல் வேண்டும். அத்தகைய எல்லா விதிகளும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

பேரவையின் செலவுகள் திரட்டு நிதியத்தின் மீது பொறுப்பிக்கப்படுதல்.

41ஏ. பேரவையினால் உறப்படும் செலவுகள் திரட்டு நிதியத்தின் மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

பேரவையின் முடிபுகளின் முடிவாந்தன்மை.

41ஐ. நூற்றி இருபத்தாறாம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைவாக, நீதிமன்றம் எதுவும், பேரவையின் ஏதேனும் முடிவை அல்லது பேரவையினால் அளிக்கப்பட்ட ஏதேனும் அங்கீகாரத்தை அல்லது செய்யப்பட்ட ஏதேனும் விதப்புரையை எத்தகையதுமான ஏதேனும் ஏதுவின் மீது அல்லது எத்தகையதுமான ஏதேனும் முறையில் ஏற்றுக்கவனிப்பதற்கான, கேட்பதற்கான அல்லது முடிபு செய்வதற்கான அல்லது கேள்விக்குட்படுத்துவதற்கான தத்துவத்தை அல்லது நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தல் ஆகாது என்பதுடன், அத்தகைய முடிபு, அங்கீகாரம் அல்லது விதப்புரை எல்லா நோக்கங்களுக்காகவும் முற்றும் முடிவானதாக இருத்தலும் வேண்டும்.

**11.** அரசியலமைப்பின் VIII என்னும் அத்தியாயம் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் அத்தியாயம் இத்தால் இடப்படுகின்றது:- *அரசியலமைப்பின் VIII என்னும் அத்தியாயத்தை மாற்றீடு செய்தல்.*

## "அத்தியாயம் VIII

### அமைச்சரவை

*பிரதம அமைச்சரும் அமைச்சரவையும்.*

**42.** (1) அரசியலமைப்புக்கு அமைவாக, குடியரசின் அரசாங்கத்தை நெறிப்படுத்துவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் பொறுப்பாக்கப்பட்ட ஓர் அமைச்சரவை இருத்தல் வேண்டும்.

(2) அமைச்சரவை பாராளுமன்றத்திற்கு கூட்டாக பொறுப்பாகவிருத்தலும் வகை கூறற்பாலதாய் இருத்தலும் வேண்டும்.

(3) பிரதம அமைச்சர் அமைச்சரவையின் தலைவராயிருத்தல் வேண்டும்.

(4) சனாதிபதி, அவரது கருத்துப்படி பாராளுமன்றத்தின் எந்த உறுப்பினர் பாராளுமன்றத்தின் நம்பிக்கையைப் பெறுவதற்கு அதிகம் வாய்ப்புள்ளவராக இருக்கின்றாரோ அந்த உறுப்பினரை பிரதம அமைச்சராக நியமித்தல் வேண்டும்.

*அமைச்சர்களும் அவர்களின் விடயங்களும் பணிகளும்.*

**43.** (1) பிரதம அமைச்சர், அமைச்சரவை அமைச்சர்களினதும் அமைச்சுக்களினதும் எண்ணிக்கை பற்றியும், அத்தகைய அமைச்சர்களுக்கு விடயங்களையும் பணிகளையும் குறித்தொதுக்குவது பற்றியும் தீர்மானித்தல் வேண்டும்.

(2) சனாதிபதி, பிரதம அமைச்சரின் ஆலோசனையின் மீது அவ்வாறு தீர்மானிக்கப்பட்ட அமைச்சுக்களுக்குப் பொறுப்பாக இருப்பதற்கென பாராளுமன்றத்தின் உறுப்பினர்களிலிருந்து அமைச்சர்களை நியமித்தல் வேண்டும்.

(3) பிரதம அமைச்சர், விடயங்களினதும் பணிகளினதும் குறித்தொதுக்குதல்களை எந்த நேரத்திலும் மாற்றலாம் என்பதுடன் அமைச்சரவையின் அமைப்பிலான மாற்றங்களை சனாதிபதிக்கு விதந்தும் உரைக்கலாம். அத்தகைய மாற்றங்கள் அமைச்சரவையின் இடையறாத் தொடர்ச்சியையும் பாராளுமன்றத்தின்பால் அமைச்சரவைக்குள்ள பொறுப்பின் இடையறா தொடர்ச்சியையும் பாதித்தல் ஆகாது.

*அமைச்சரவை அமைச்சர்கள் அல்லாத அமைச்சர்கள்.*

**44.** (1) சனாதிபதி பிரதம அமைச்சரின் ஆலோசனையின் மீது பாராளுமன்ற உறுப்பினர்களிலிருந்து அமைச்சரவையின் உறுப்பினர்களாக இல்லாதவர்களை அமைச்சர்களாக நியமிக்கலாம்.

(2) பிரதம அமைச்சர், (1) ஆம் பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட அமைச்சர்களுக்கு குறித்தொதுக்கப்பட வேண்டியிருக்கின்றதான விடயங்களையும் பணிகளையும், அத்துடன் அத்தகைய அமைச்சர்களின் பொறுப்பில் இருக்கவேண்டிய அமைச்சுக்கள் ஏதேனும் இருப்பின் அவற்றினையும் தீர்மானித்தல் வேண்டும்.

(3) பிரதம அமைச்சர் இவ்வுறுப்புரையின் (2)ஆம் பந்தியின் கீழ்செய்யப்பட்ட ஏதேனும் குறித்தொதுக்குதலை எந்தநேரத்திலும் மாற்றலாம்.

(4) ஓராம் பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட ஒவ்வொரு அமைச்சரும் அமைச்சரவைக்கும் பாராளுமன்றத்துக்கும் பொறுப்பாதல் வேண்டும்.

(5) பிரதம அமைச்சரின் கோரிக்கை மீது அமைச்சரவையின் எவரேனும் அமைச்சர், அவருக்கு அல்லது அவளுக்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் விடயத்திற்குரிய அல்லது பணிக்குரிய ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்மூலம் அவருக்கு அல்லது அவளுக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர் மீது அல்லது அவள் மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை அமைச்சரவையின் உறுப்பினராக இராத எவரேனும் அமைச்சருக்கு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பு மூலம் கையளிக்கலாம், அத்துடன் இந்தப்பந்தியின் கீழ் அவருக்கு அல்லது அவளுக்கு கையளிக்கப்பட ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை, அத்தகைய தத்துவம் அல்லது கடமை அமைச்சரவையின் அத்தகைய அமைச்சர் மீது அளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்விதம் இருப்பினும், பிரயோகித்தலும் புரிதலும் அத்தகைய அமைச்சருக்கு சட்டமுறையானதாதல் வேண்டும்.

பிரதியமைச்சர்கள்.

45. (1) சனாதிபதி, பிரதம அமைச்சரின் ஆலோசனைமீது அமைச்சரவை தமது கடமைகளைப் புரிவதில் அவர்களுக்கு உதவுவதற்கெனப் பாராளுமன்ற உறுப்பினர்களிலிருந்து பிரதி அமைச்சர்களை நியமிக்கலாம்.

(2) பிரதம அமைச்சரின் வேண்டுகோளின் மீதும் அமைச்சரவையின் எவரேனும் அமைச்சர், அவருக்கு அல்லது அவளுக்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் விடயம் அல்லது பணி தொடர்பிலான ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை, அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் அவருக்கு அல்லது அவளுக்கு அளிக்கப்பட்ட அல்லது

அவர் மீது அல்லது அவள் மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவிப்பின் மூலமும் அவர் எவரேனும் பிரதியமைச்சருக்கு கையளிக்கலாம், அத்துடன் இப்பிரிவின் கீழ் அந்தத் தத்துவம் அல்லது கடமை அத்தகைய அமைச்சருக்கு அல்லது அவர் மீது எந்த எழுத்தி லான சட்டத்தினால் அளிக்கப்பட்டுள்ளதோ அல்லது சுமத்தப்பட்டுள்ளதோ அந்த எழுத்தி லான சட்டத்தினால் முரணாக எது எப்படியிருப்பி னும் இப்பந்தியின் கீழ் அவருக்கு அல்லது அவளுக்கு கையளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை பிரயோகிப்பதும் புரிவதும் அத்தகைய பிரதியமைச்சருக்கு சட்டமுறையான தாதல் வேண்டும்.

*அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் என்போரின் எண்ணிக்கை யினதும் பதவிக் காலத்தினதும் வரையறை.*

46. (1) (அ) அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கை முப்பதை விஞ்சுதலாகாது, அத்து டன்

(ஆ) அமைச்சரவை அமைச்சர்கள் அல்லாத அமைச்சர்களினதும் பிரதி அமைச்சர்களினதும் எண்ணிக்கை மொத்தத்தில் நாற்பதை விஞ்சுத லாகாது.

(2) அமைச்சரவையின் அமைச்சர் ஒருவர் அல்லது அமைச்சரவைக்கு வெளியே உள்ள அமைச்சர் அல்லது பிரதியமைச்சர் பின்வரும் சந்தர்ப்பங்களில் தவிர அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் கீழ் அமைச்சரவை தொடர்ந்து பணியாற்றும் காலம் முழுவதும் அவர் தொடர்ந்து பதவிவகித்தல் வேண்டும்:-

(அ) பிரதம அமைச்சரின் ஆலோசனை மீது அவர் அல்லது அவள் சனாதிபதியின் கைப்பட்ட ஒருகடிதத்தின் மூலம் பதவி யினின்றும் அகற்றப்பட்டிருந்தாலொழிய;

(ஆ) சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பும் அவருடைய அல்லது அவளுடைய கைப்பட்ட கடிதத்தின் மூலம் அவர் அல்லது அவள் தமது பதவியைத் துறந்தாலொழிய ;

(இ) பாராளுமன்ற உறுப்பினராக அவர் அல்லது அவள் இல்லாதொழிந்தா லொழிய.

(3) இவ்வுறுப்புரை நடைமுறைக்கு வந்தபின்னர் உடனடியாக நடைபெறும் பொதுத்தேர்தலின் முடிவின்போது பாராளுமன்றத்தில் ஆகக் கூடுதலான ஆசனங்களைப் பெறும் அங்கீகரிக் கப்பட்ட அரசியற் கட்சியும் சுயேட்சைக் குழுவும், தேசிய ஐக்கிய அராசாங்கமொன்றை உருவாக்க உடன்பட்டால், அப்போது (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகள் எவை எப்படியிருப்பினும், எண்ணிக்கை அதிகரிப்புக்கு பாராளுமன்றம் உடன்பட்டால் அத்தகைய பாராளுமன்றத்தின் முதலாவது இருக்கையிலிருந்து இரண்டு கிழமை களுள் அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக் கையும் அமைச்சரவைக்கு வெளியேயுள்ள அமைச்சர்களினதும் பிரதி அமைச்சர்களதும் எண்ணிக்கையும் முறையே நாற்பத்தைந்து மற்றும் ஐம்பத்தைந்து வரையில் அதிகரிக்கப்படலாம்.

*பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னரான காலத்திலுள்ள அமைச்சரவை.*

**47.** (1) பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு நேர்முன்னர் பணியாற்றுகின்ற அமைச்சரவை, அத்தகைய கலைத்தல் எவ்வாறிருப்பினும் தொடர்ந்து பணியாற்றுதல் வேண்டுமென்பதுடன், பொதுத் தேர்தல் முடிவுற்றதும் பணியாற்றா தொழிதலும் வேண்டும், அத்துடன் அதற்கிணங்க பிரதம அமைச்சரும், அமைச்சரவையின் அமைச்சர்களும், 46ஆம் உறுப்புரையின் (அ)

அல்லது (ஆ) என்னும் பந்தியில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளவாறாக பதவி வகிக்காதொழிந்தாலன்றி தொடர்ந்தும் பணியாற்றுதல் வேண்டும்.

(2) பாராளுமன்றக் கலைத்தலுக்கும் பொதுத் தேர்தல் முடிவுறுதலுக்கும் இடைப்பட்ட காலத்தின் போது பிரதம அமைச்சர் இறந்துள்ளமை, பதவியிலிருந்து அகற்றப்பட்டமை அல்லது பதவியை துறந்தமை எவ்வாறிருப்பினும் அமைச்சரவையானது, அமைச்சரவையின் ஏனைய அமைச்சர்களை அதன் உறுப்பினர்களாகக் கொண்டு, பொதுத்தேர்தல் முடிவுறும் வரை தொடர்ந்துபணியாற்றுதல் வேண்டும். சனாதிபதி அத்தகைய ஒரு அமைச்சரை பிரதம அமைச்சரின் தத்துவங்களையும், கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும், நிறைவேற்றுவதற்கும் புரிவதற்குமாக நியமிக்கலாம்.

(3) பாராளுமன்றக் கலைத்தலுக்கும் பொதுத் தேர்தல் முடிவுறுதலுக்கும் இடைப்பட்ட காலத்தின் போது அமைச்சரவையின் அமைச்சர் ஒருவர் இறப்பதன் மீது, பதவியிலிருந்து அகற்றப் படுவதன் மீது, அல்லது பதவி துறப்பதன் மீது, சனாதிபதி, பிரதி அமைச்சரின் ஆலோசனை மீது அத்தகைய அமைச்சுக்குப் பொறுப்பாக இருப்பதற்கென அல்லது அத்தகைய அமைச்சரின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிக்கவும் புரியவும் நிறைவேற்றவும் என வேறு எவரேனும் அமைச்சரை நியமிக்கலாம்.

*அமைச்சரவையைக் கலைத்தல்.*

**48.** (1) பிரதம அமைச்சர் பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கும் பொதுத் தேர்தல் முடிவுறுதலுக்கும் இடைப்பட்ட காலத்தின் போது தவிர, இறப்பதன் மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம் அல்லது பதவி துறப்ப

தன் மூலம் அல்லது வேறு வகையாக பதவி வகிக்காதொழிந்ததன் மேல், சனாதிபதி 70ஆம் உறுப்புரையின் கீழ் தமது தத்துவங்களைப் பிரயோகிக்கையில் பாராளுமன்றத்தைக் கலைத் திருந்தாலொழிய, அமைச்சரவை கலைக்கப்பட்ட தாயிருக்கும் என்பதுடன், சனாதிபதி 42, 43, 44 மற்றும் 45 என்னும் உறுப்புரைகளின் நியதியின் படி ஒரு பிரதம அமைச்சரையும், அமைச்சரவை யின் அமைச்சர்களையும், ஏனைய அமைச்சர்க ளையும் பிரதி அமைச்சர்களையும் நியமித்தலும் வேண்டும்:

ஆயின் பிரதம அமைச்சர் அவ்வாறு பதவி வகிக்காதொழிந்ததன் பின்னர் பாராளுமன்றம் கலைக்கப்பட்டால், பொதுத்தேர்தல் முடிவடையும் வரை அமைச்சரவை, அமைச்சரவையின் ஏனைய அமைச்சர்களை அதன் உறுப்பினர்களாகக் கொண்டு தொடர்ந்து பணியாற்றுதல் வேண்டும். சனாதிபதி, பிரதம அமைச்சரின் தத்துவங்களை யும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்ப தற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் அத்த கைய அமைச்சர்களுள் ஒருவரை நியமிக்கலாம், என்பதுடன், 47ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(2) பாராளுமன்றம் அரச கொள்கைக் கூற்றை அல்லது ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை நிராகரித்தால் அல்லது அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை நிறைவேற்றினால் அமைச் சரவை கலைக்கப்பட்டதாதல் வேண்டுமென்பது டன், சனாதிபதி 70ஆம் உறுப்புரையின் கீழ் தமது தத்துவங்களைப் பிரயோகிக்கையில் பாராளு

மன்றத்தைக் கலைத்திருந்தாலொழிய, 42, 43, 44 மற்றும் 45ஆம் உறுப்புரைகளின் நியதிகளின்படி பிரதம அமைச்சர் ஒருவரையும், அமைச்சரவையின் அமைச்சர்களையும் ஏனைய அமைச்சர்களையும் பிரதியமைச்சர்களையும் நியமித்தல் வேண்டும்.

பதில் அமைச்சர்களும் பிரதியமைச்சர் களும்.

49. 44 ஆம் உறுப்புரையின் கீழ் நியமிக்கப்பட்ட அமைச்சரவையின் ஓர் அமைச்சர், ஏனைய அமைச்சர் அல்லது பிரதியமைச்சர் அவருடைய அல்லது அவளுடைய பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு எப்போதேனும் இயலாதிருக்கும் போது, அத்தகைய அமைச்சரவை அமைச்சரின், ஏனைய அமைச்சரின் அல்லது பிரதியமைச்சரின் இடத்தில் பதில்கடமையாற்றுவதற்கென சனாதிபதி பிரதம அமைச்சரின் ஆலோசனையின்மீது பாராளுமன்றத்தின் உறுப்பினரெவரையும் நியமிக்கலாம்.

அமைச்சரவைச் செயலாளர்.

50. (1) அமைச்சரவைக்குச் செயலாளர் ஒருவர் இருத்தல் வேண்டுமென்பதுடன் அவர் சனாதிபதியினால் நியமிக்கப்படுதலும் வேண்டும்.

(2) செயலாளர் பிரதம அமைச்சரின் பணிப்புக்கமைய, அமைச்சரவை அலுவலகத்திற்குப் பொறுப்பாயிருத்தல் வேண்டும் என்பதுடன், பிரதம அமைச்சரினால் அல்லது அமைச்சரவையினால் அவருக்கு அல்லது அவளுக்கு குறித்தொதுக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறு பணிகளையும் கடமைகளையும் அவர் அல்லது அவள் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

பிரதம அமைச்சரின் செயலாளர்.

51. (1) பிரதம அமைச்சருக்குச் செயலாளர் ஒருவர் இருத்தல் வேண்டுமென்பதுடன், அவர் சனாதிபதியினால் நியமிக்கப்படுதலும் வேண்டும்.

(2) செயலாளர், பிரதம அமைச்சரின் அலுவலகத்துக்குப் பொறுப்பாதல் வேண்டுமென்பதுடன், பிரதம அமைச்சரின் பணிப்புக்களுக்கமைய அவரது அல்லது அவளது கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றுதலும் புரிதலும் வேண்டும்.

அமைச்சுக்களின் செயலாளர்கள்.

52. (1) அமைச்சரவை அமைச்சரின் ஒவ்வோர் அமைச்சுக்கும் செயலாளா ஒருவர் இருத்தல் வேண்டும். அவர் சனாதிபதியால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) அமைச்சின் செயலாளர் அவரது அல்லது அவளது அமைச்சரின் பணிப்புக்கும் கட்டுப்பாட்டிற்கும் அமைய, அமைச்சரின் பொறுப்பிலுள்ள அரசாங்க திணைக்களங்களின் மீது அல்லது வேறு நிறுவனங்களின் மீது மேற்பார்வை செய்தல் வேண்டும்.

(3) ஓர் அமைச்சின் செயலாளர், அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் கீழ் அமைச்சரவை கலைக்கப்படுவதன் மீது அல்லது பிரதம அமைச்சரினால் அரசியலமைப்பின் 43ஆம் அல்லது 44ஆம் உறுப்புரையின்கீழ் ஒரு தீர்மானம் செய்யப்பட்டதன் மேல் செயலாளர் பதவியை வகியாதொழிதல் வேண்டும். இது அமைச்சை இல்லாதாக்கும் விளைவை உடையதாயிருக்கும்.

(4) இவ்வுறுப்புரையின் நோக்கங்களுக்காக, சனாதிபதியின் செயலாளரின் அலுவலகம், அமைச்சரவை செயலாளரின் அலுவலகம், கணக்காய்வாளர் - தலைமையதிபதியின் அலுவலகம், நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளரின் (ஓம்புட்சுமான்) அலுவலகம், பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் அலுவலகம், அரசியல

மைப்புப் பேரவை, அத்துடன் 41ஆ என்னும் உறுப்புரைக்கான அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆணைக்குழுக்கள் என்பன அரசாங்க திணைக்களங்கள் அல்லாதவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

பதவிச் சத்தியமும் உறுதி உரையும்.

53. இவ்வத்தியாயத்தில் குறிப்பீடு செய்யப் பட்டுள்ள ஏதேனும் பதவிக்கு நியமிக்கப்படும் ஆளொவ்வருவரும் நான்காம் அட்டவணையில் தரப்பட்டுள்ள சத்தியத்தைச் செய்து கீழே ஒப்ப மிடும் வரை அல்லது உறுதியுரையை மொழிந்து கீழே ஒப்பமிடும்வரை அவரது பதவிக்குரிய கடமைகளை மேற்கொள்ளுதலாகாது.".

அரசியலமைப் பின் 54 ஆம் உறுப்புரை யினைத் திருத்துதல்.

**12.** அரசியலமைப்பின் 54ஆம் உறுப்புரையானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது:-

(1) அவ்வுறுப்புரையின் (1)ஆம் பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாகப் பின்வரும் பந்தியினை இடுவதன் மூலமும்:-

"(1) (இவ்வத்தியாயத்தின் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பகிரங்கசேவை ஆணைக்குழு ஒன்றிருத்தல் வேண்டும். அது அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது சனாதிபதியினால் நியமிக்கப்படும் ஒன்பது உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்தகைய உறுப்பினர்களுள் மூன்று உறுப்பினர்களுக்கு குறையாதோர் பகிரங்க அலுவலராகப் பதினைந்தாண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவத்தை உடையவர்களாக இருத்தல் வேண்டும். சனாதிபதி அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது உறுப்பினர் ஒருவரை அதன் தவிசாளராக நியமித்தல் வேண்டும்."

(2) அவ்வுறுப்புரையின் (4) ஆம் பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாக பின்வரும் பந்தியினை இடுவதன் மூலமும்:-

"(4) ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒவ்வொருவரும் அவர் அல்லது அவள் இவ்வுறுப்புரையின் (2) ஆம் பந்தியின் கீழ் ஏதேனும் தகைமையீனத்துக்கு உட்பட்டவராக வந்தாலொழிய அல்லது சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பப்படும் எழுத்தின் மூலம் முன்கூட்டியே தமது பதவியை துறந்தாலொழிய அல்லது அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரை யின் மீது சனாதிபதியினால் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய அல்லது ஒழுக்கக்கேட்டை உட்படுத்துகின்ற ஏதேனும் தவறுக்கு நீதிமன்றம் ஒன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டாலொழிய அல்லது 81 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி அவர் மீது குடியியற்றகுதியீனத்தை விதிப்பதற்கான தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டாலொழிய அல்லது இவ்வுறுப்புரையின் (5)ஆம் பந்தியின் கீழ் தமது பதவியை வறிதாக்கியுள்ளார் எனக் கருதப்பட்டா லொழிய அவரது நியமன தேதியிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும்.".

(3) அவ்வுறுப்புரையின் (7) ஆம் பந்தினை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாகப் பின்வரும் பந்தியினை இடுவதன் மூலமும் :-

"(7) சனாதிபதி, இரண்டு மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு உறுப்பினரொருவர் ஆணைக் குழு தொடர்பான கடமைகளைப் புரிவதிலிருந்து அவருக்கு அல்லது அவளுக்கு லீவு வழங்கலாமென்ப துடன் அவர் அத்தகைய காலப்பகுதியின் போது அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக தகைமை பெற்ற ஆளொருவரை அத்தகைய லீவுக் காலப்பகுதிக்கு தற்காலிக உறுப்பினரொருவராக இருப்பதற்கு நியமித்த லும் வேண்டும்."

**13.** அரசியலமைப்பின் 56 ஆம் உறுப்புரை, அவ் உறுப்புரையின் (1) ஆம் பந்தியில் "அமைச்சரவையினால் குறித்துரைக்கப்படுகின்றவாறான" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆணைக் குழுவினால் குறித்துரைக்கப்படுகின்றவாறான" சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*அரசியலமைப்பின் 56 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**14.** அரசியலமைப்பின் 57 ஆம் உறுப்புரை, அவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியில் "அமைச்சரவையினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆணைக் குழுவினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*அரசியலமைப்பின் 57 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**15.** அரசியலமைப்பின் உறுப்புரை 61அ, அவ்வுறுப்புரையில், "நூற்றியிருபத்தாறாம் உறுப்புரையின் (1)ஆம், (2)ஆம், (3)ஆம், (4)ஆம் அத்துடன் (5) என்னும் பந்திகளின் ஏற்பாடுகளுக்கமைவாக என்னும் சொற்களுக்குப் பதிலாக, "59ஆம் உறுப்புரையினதும் 126 ஆம் உறுப்புரையினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*அரசியலமைப்பின் 61அ என்னும் உறுப்புரையைத் திருத்துதல்.*

**16.** அரசியலமைப்பின் 61 உ மற்றும் 61 ஊ என்னும் உறுப்புரைகள் இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அவற்றுக்குப் பதிலாக பின்வரும் உறுப்புரைகள் இடப்படுகின்றன:-

*அரசியலமைப்பின் 61உ மற்றும் 61ஊ என்னும் உறுப்புரைகளை மாற்றீடு செய்தல்.*

*"சனாதிபதியால் செய்யப்படும் நியமனங்கள்.*

61உ. (1) சனாதிபதியானவர்-

(அ) தரைப்படை, கடற்படை அத்துடன் வான் படைத் தலைவர்களையும் ; அத்துடன்

(ஆ) அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துக்கமைய, சட்டத்துறைத் தலைமையதிபதியையும் பொலிசு பரிசோதகர் தலைமையதிபதியையும் நியமித்தல் வேண்டும்.

(2) சட்டத்துறைத் தலைமையதிபதியும் மற்றும் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிப் பதவிகளை வகிப்போர் அறுபது வயதை எய்துவதன் மேல் பதவியை வறிதாக்குதல் வேண்டும்.

பொருள் கோடல்.

61ஊ. இவ்வத்தியாயத்தின் நோக்கங்களுக்காக, ''பகிரங்க அலுவலர்'' என்பது, தரைப்படை, கடற்படை அல்லது வான்படை உறுப்பினரொருவரை, தேர்தல் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட அத்தகைய ஆணைக்குழுவின் அலுவலரொருவரை, தேசிய பொலிசு ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் பொலிசு அலுவலரொருவரை, நீதித்துறைச் சேவை ஆணைக் குழுவினால் நியமிக்கப்படும் அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்க அலுவலரொருவரை அல்லது அரச கணக்காய்வு சேவையை சேர்ந்த உறுப்பினரொருவரை உண்டாக்காது.''

அரசியலமைப்பின் 62 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.

**17**. அரசியலமைப்பின் 62 ஆம் உறுப்புரை, அவ்வுறுப்புரையின் (2) ஆம் பந்தியை நீக்கஞ் செய்து அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது: -

''(2) பாராளுமன்றமானது முன்னாதாகக் கலைக்கப்பட்டாலொழிய, ஒவ்வொரு பாராளுமன்றமும் அதன் முதலாவது கூட்டத்திற்கென நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் கொண்ட காலத்துக்குத் தொடர்ந்திருத்தல் வேண்டும், அத்துடன் சொல்லப்பட்ட ஐந்து ஆண்டுகாலம் முடிவடைதல் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதாகச் செயற்படுதலும் வேண்டும்.''

அரசியலமைப்பின் 65 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.

**18**. அரசியலமைப்பின் 65ஆம் உறுப்புரை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது-

(1) அவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்கு பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:-

"(1) பாராளுமன்றத்துக்குச் செயலாளர் நாயகம் ஒருவர் இருத்தல் வேண்டும் அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துக்கமைய சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன் அவர் நன்னடத்தையுடையவராகவுள்ள காலத்தின் போது அப்பதவியை வகுத்தலும் வேண்டும்; அத்துடன்

(2) அவ்வுறுப்புரையின் (6) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்கு பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:-

"(6) செயலாளர் - நாயகம் அவரது பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு, இயலாதவராகவுள்ள போதிலெல்லாம், செயலாளர் நாயகத்தின் இடத்தில் பதிற்கடமை ஆற்றுவதற்கென ஆளொருவரை அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துக்கமைய சனாதிபதி நியமிக்கலாம்."

*அரசியலமைப்பின் 70 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**19**. அரசியலமைப்பின் 70 ஆம் உறுப்புரை, அவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியை நீக்கஞ் செய்து அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"(1) சனாதிபதி, பிரகடனத்தின் மூலம், பாராளுமன்றத்தைக் கூடுமாறு அழைக்கலாம், அமர்வு நிறுத்தலாம், அத்துடன் கலைக்கலாம்:

ஆயினும், சனாதிபதி, பாராளுமன்றம் அதன் முதல் கூட்டத்துக்காக நியமித்த தேதியிலிருந்து நான்கு ஆண்டுகள் ஆறுமாதங்களுக்கும் குறையாத ஒரு காலப்பகுதி முடிவுறும் வரை, பாராளுமன்றத்தின் மொத்த எண்ணிக்கையினரால் (சமுகமளிக்காதோர் உட்பட) மூன்றிலிரண்டு உறுப்பினர்களால் நிறைவேற்றப்படும் தீர்மானமொன்றினால் அங்ஙனம் செய்யுமாறு பாராளுமன்றம் சனாதிபதியை வேண்டினாலொழிய அதனைக் கலைக்க முடியாது."

**20.** அரசியலமைப்பின் 78 ஆம் உறுப்புரை, அவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியை நீக்கஞ் செய்துவிட்டு அதற்கு பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:- *அரசியலமைப்பின் 78 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

"(1) சட்டமூலம் ஒவ்வொன்றும் பாராளுமன்றத்தின் நிகழ்ச்சித்தாளில் இடப்படுவதற்கு முன்னர் ஆகக் குறைந்தது பதினான்கு நாட்களுக்கு முன்னரேனும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்."

**21.** அரசியலமைப்பின் 85 ஆம் உறுப்புரை, அவ்வுறுப்புரையின் (2) ஆம் பந்தியை நீக்கி விடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. *அரசியலமைப்பின் 85 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**22.** அரசியலமைப்பின் 91 ஆம் உறுப்புரை அவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் (ஈ) என்னும் உட்பந்தியில் பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது:- *அரசியலமைப்பின் 91 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

(1) உட்பந்தி (V), (Vஅ) மற்றும் (Vஇ) என்னும் விடயங்களுக்குப் பதிலாக பின்வரும் விடயங்களை இடுவதன் மூலமும்:-

"(V) 41அ ஆம் உறுப்புரையின் (1) பந்தியின் (ஈ),(உ) மற்றும் (ஊ) என்னும் உட்பந்திகளில் குறிப்பீடு செய்யப்படும் அரசியலமைப்புப் பேரவையின் ஓர் உறுப்பினராகவிருந்தால்;

(Vஅ) 41ஆ என்னும் உறுப்புரைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்படும் ஏதேனும் ஆணைக்குழுவின் ஓர் உறுப்பினராகவிருந்தால்;

(Vஆ) தேர்தல்கள் ஆணையாளர் தலைமையதிபதியாகவிருந்தால்" ;

(2) அவ்வுட்பந்தியின் விடயம் (vii) இல் "ஏதேனும் பதவியை வகிக்கும் பகிரங்க அலுவலராக இருந்தால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் பதவியை வகிக்கும் பகிரங்க அலுவலராக அல்லது இலங்கை அரச கணக்காய்வு சேவையின் உறுப்பினராகவிருந்தால்," என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

(3) அப்பந்தியின் விடயம் (viii) இல் "ஏதேனும் பதவியை வகிக்கும் பகிரங்க அலுவலராக இருந்தால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் பதவியை வகிக்கும் பகிரங்க அலுவலராக அல்லது இலங்கை அரச கணக்காய்வு சேவையின் உறுப்பினராகவிருந்தால்," என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(4) அப்பந்தியின் விடயம் (xii) என்பதனை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய விடயத்தை சேர்ப்பதன் மூலமும்:-

"(xiii) வேறு ஏதேனும் நாட்டின் பிரசையாகவுமுள்ள இலங்கைப் பிரசையொருவர் ;".

அரசியலமைப்பின் 92 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.

**23.** அரசியலமைப்பின் 92 ஆம் உறுப்புரை பின்வருமாறு இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுறுப்புரையின் (அ) என்னும் பந்தியில், "முப்பது வயதையடையாதவராக," என்னும் சொற்களுக்கு பதிலாக, "முப்பந்தைந்து வயதையடையாதவராக" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்

(2) அவ்வுறுப்புரையின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை சேர்ப்பதன் மூலமும்:-

"(இ) அவர் சனாதிபதி பதவிக்கு மக்களினால் இருதடவைகள் தேர்ந்தெடுக்கப்பட்டவராக இருந்தால்."; அத்துடன்

(3) அவ்வுறுப்புரையின் (ஈ) என்னும் பந்தியை நீக்கிவிடுவதன் மூலமும்.

அரசியலமைப்பின் 99ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.

**24.** அரசியலமைப்பின் 99ஆம் உறுப்புரை அவ்வுறுப்புரையின் இறுதியில் பின்வரும் புதிய பந்தியை சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(14) அவ்வுறுப்புரையின் (13)ஆம் பந்தியில் ஏற்பாடு செய்யப்படவாறு தவிர, நீதிமன்றமெதுவும் பாராளுமன்ற உறுப்பினரொருவரான அதன் உறுப்பினரொருவருக்கெதிராக ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினால் அல்லது சுயேச்சைக்குழுவினால் எடுக்கப்பட்ட அல்லது எடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பில் ஏதேனும் கருமத்தை விசாரிப்பதற்கும் தீர்மானிப்பதற்கும் நியாயாதிக்கத்தை கொண்டிருத்தலாகாது என்பதுடன், அதற்கிணங்க நீதிமன்றமெதுவும் ஏதேனும் அத்தகைய நடவடிக்கையை அல்லது உத்தேசிக்கப்பட்ட நடவடிக்கையை தடுக்கும், தடைப்படுத்தல் அல்லது தடைசெய்யும் தடைக்கட்டளையை, தடைசெய் கட்டளையை, அல்லது வேறு ஏதேனும் நிவாரணத்தை வழங்குதல் ஆகாது.".

அரசியலமைப்பின் 103 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.

**25.** அரசியலமைப்பின் 103 ஆம் உறுப்புரை பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியை நீக்கம் செய்துவிட்டு அதற்கு பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:-

"(1) (இவ்வத்தியாயத்தில் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தேர்தல் ஆணைக்குழுவொன்று இருத்தல் வேண்டும். அது ஏதேனும் உயர்தொழிலில் அல்லது நிருவாகம் அல்லது கல்விசார் துறைகளில் தமக்கென பிரசித்தி பெற்றவர்களாகவுள்ள ஆட்களிடையேயிருந்து, அரசியலமைப்பு பேரவையின் விதப்புரையின்

மீது, சனாதிபதியால் நியமிக்கப்படும் மூன்று உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். அங்ஙனம் நியமிக்கப்படும் உறுப்பினர்களில் ஒருவர் பிரதி தேர்தல்கள் ஆணையாளராக அல்லது அதற்கு மேற்பட்ட பதவியை வகித்தவரான தேர்தல்கள் திணைக்களத்தின் ஓய்வுபெற்ற அலுவலர் ஒருவர் நியமிக்கப்படுதல் வேண்டும். சனாதிபதி, அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது உறுப்பின ரொருவரை அதன் தவிசாளராக நியமித்தல் வேண்டும்."; அத்துடன்

(2) அவ்வுறுப்புரையின் (7) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:-

"(7) சனாதிபதி, உறுப்பினரொருவருக்கு இரண்டு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு ஆணைக்குழு தொடர்பான கடமைகளைப் புரிவதிலிருந்து லீவு வழங்கலாம் என்பதுடன், அத்தகைய லீவு காலப்பகுதிக்கு தற்காலிக உறுப்பினரொருவராக இருப்பதற்குத் தகைமை பெற்ற ஆளொருவரை ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கலாம். அத்தகைய ஒவ்வொரு நியமனமும் அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது செய்யப்படுதல் வேண்டும்.".

*அரசியலமைப்பின் 104ஆ என்னும் உறுப்புரையைத் திருத்துதல்.*

**26**. அரசியலமைப்பின் 104ஆ என்னும் உறுப்புரை, அவ்வுறுப்புரையின் (4), 4(அ) மற்றும் (5) என்னும் பந்திகளை நீக்கி விட்டு அவற்றுக்குப் பதிலாக பின்வரும் பந்திகளை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(4) (அ) ஆணைக்குழுவானது, அதன் அறிவுறுத்தல்களின் மீது ஆணைக்குழுவின் தவிசாளரின் அல்லது தேர்தல்கள் ஆணையாளர் தலைமையதிபதியின் கைப்பட எழுத்திலான பணிப்பொன்றின் மூலம்:-

(i) தேர்தலை அல்லது அத்தகைய தேர்தலில் போட்டியிடுகின்ற ஏதேனும் அரசியற்கட்சி அல்லது சுயேச்சைக் குழுவின் எவரேனும் வேட்பாளரை ஊக்கப்படுத்துகின்ற அல்லது தடுக்கின்ற நோக்கத்துக்காக ;

(ii) அத்தகைய தேர்தலில் போட்டியிடுகின்ற எவரேனும் வேட்பாளரினால் அல்லது ஏதேனும் அரசியற் கட்சியினால் அல்லது ஏதேனும் சுயேச்சைக் குழுவினால்,

தேர்தல் காலத்தின் போது, அரசுக்கு அல்லது ஏதேனும் பகிரங்க கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான ஏதேனும் அசையும் அல்லது அசையா ஆதனம் பயன்படுத்தப் படுதலைத் தடை செய்வதற்கு தத்துவமுடையதாதல் வேண்டும்.

(ஆ) அத்தகைய பணிப்புக்கு இணங்கியொழுகுதல் மற்றும் பயன்கொடுத்தல். அத்தகைய ஆதனம் அப்போதைக்கு எந்த அலுவலரின் கட்டுக்காப்பில் அல்லது கட்டுப்பாட்டின் கீழ் உள்ளதோ அந்த ஆள் அல்லது அலுவலர் ஒவ்வொருவரினதும் கடமையாதல் வேண்டும்.

(5) (அ) ஆணைக்குழுவானது, ஒரு சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை உறுதிப்படுத்த அவசியமானதென ஆணைக்குழு கருதக்கூடியவாறு விடயத்துக்கேற்ப, ஏதேனும் ஒலிபரப்பு அல்லது ஒளிபரப்பு தொழிற்படுத்துநர் அல்லது ஒரு செய்தித்தாளொன்றின் எவரேனும் உரிமையாளருக்கு அல்லது வெளியீட்டாளருக்கு ஏதேனும் தேர்தலை நடாத்துதல் அல்லது ஏதேனும் மக்கள் தீர்ப்பை நடத்துதல் தொடர்பில் ஆணைக்குழு பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய வழிகாட்டிகளைக் காலத்துக்காலம் வழங்கத் தத்துவம் கொண்டதாதல் வேண்டும். ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட அத்தகைய எல்லா வழிகாட்டிகளுக்கும் ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்பட்டவாறான முறையில் போதியளவு விளம்பரம் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) உட்பந்தி (அ) வின் கீழ் அவர்களுக்கு வழங்கப்படுவதான அத்தகைய வழிகாட்டிகளுடன் இணங்கியொழுகுவதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தல், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினது தவிசாளரினதும், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தவிசாளரினதும் மற்றும் சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பின் தவிசாளரினதும் மற்றும் அரசினால் சொந்தமாக்கப்பட்ட அல்லது கட்டுப்படுத்தப்பட்ட வேறு ஒவ்வொரு ஒளிபரப்பு அல்லது ஒலிபரப்பு தொழில்முயற்சி மற்றும் ஒவ்வொரு தனியார் ஒலிபரப்பு தொழில்முயற்சியின் பிரதான நிறைவேற்று அலுவலர் அல்லது ஒளிபரப்பு தொழிற்படுத்துநரினதும் கடமையாதல் வேண்டும்.

(இ) விடயத்துக்கேற்ப, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் இலங்கை ரூபாவாஹினிக் கூட்டுத்தாபனம் அல்லது சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு அல்லது அரசினால் சொந்தமாக்கப்பட்ட அல்லது கட்டுப்படுத்தப்பட்ட வேறு ஏதேனும் ஒலிபரப்பு அல்லது ஒளிபரப்பு தொழில்முயற்சி அல்லது ஒவ்வொரு தனியார் ஒலிபரப்பின் தொழில்முயற்சி அல்லது ஒளிபரப்பு தொழிற்படுத்துநர் தனியார் ஒலிபரப்பு அல்லது ஒளிபரப்பு தொழிற்படுத்துநர் (அ) என்னும் பந்தியின் கீழ் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட எவையேனும் வழிகாட்டிகளை மீறுகின்ற விடத்து, ஆணைக்குழுவானது ஒரு தகுதிவாய்ந்த அதிகாரியை பெயர் குறித்து அல்லது பதவி குறித்து நியமிக்கலாம் என்பதுடன், அவர் அத்தகைய நியமனத் தேதியிலிருந்து பயனுறுவதாக ஆணைக்குழுவின் அபிப்பிராயத்தில் தேர்தல் மீது தாக்கம் உண்டுபண்ணும் சகல அரசியல் ஒலிபரப்பு அல்லது வேறு ஏதேனும் ஒலிபரப்பு தொடர்பாக அது தொடர்புபடக்கூடியவாறான அந்தளவிற்கு விடயத்துக்கேற்ப, அத்தகைய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின், ரூபாவாஹினிக் கூட்டுத்தாபானத்தின், சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பின் அல்லது அரசினால் சொந்தமாக்கப்பட்ட அல்லது கட்டுப்படுத்தப்பட்ட

வேறு ஒலிபரப்பு அல்லது ஒளிபரப்பு தொழில்முயற்சி அல்லது அத்தகைய தனியார் ஒலிபரப்பின் தொழில் முயற்சி அல்லது ஒளிபரப்பு தொழிற்படுத்துநர் தொழில் முயற்சியின் முகாமையை தேர்தலின் முடிவுவரை கையேற்றலும் வேண்டும் அத்துடன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், இலங்கை ரூபாவாஹினி கூட்டுத்தாபனம், சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு அல்லது அரசினால் சொந்தமாக்கப்பட்ட அல்லது கட்டுப்படுத்தப் பட்ட வேறு ஒலிபரப்பு அல்லது ஒளிபரப்பு தொழில்முயற்சி அல்லது அத்தகைய தனியார் ஒலிபரப்பின் தொழில் முயற்சி அல்லது ஒளிபரப்பு தொழிற்படுத்துநர் அத்தகைய காலத்தின் போது தகுதிவாய்ந்த அதிகாரியினால் கையேற்கப்பட்ட அத்தகைய முகாமையுடன் சம்மந்தப்பட்ட அல்லது தொடர்புபட்ட எப்பணியையும் நிறைவேற்றுதலும் ஆகாது.

(ஈ) பாராளுமன்றமானது உட்பந்தி (இ) இன் கீழ் நியமிக் கப்படும் தகுதிவாய்ந்த அதிகாரியின் தத்துவங்களையும் பணிகளையும் சட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்யலாம்.

(உ) ஆணைக்குழு இப்பந்தியின்கீழ் வழங்கப்பட்ட வழி காட்டிகளை குறைந்தபட்சம் பரந்தளவில் புழக்கத்திலுள்ள சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலான செய்தித்தாளொன்றில் வெளியிடுவதற்கு செய்வித்தலும் வேண்டும்.

(6) அவ்வுறுப்புரையின் (5) ஆம் பந்தியின் ஏற்பாடுகள் விடயத்துக்கேற்ப தேர்தலொன்றின் வேட்பாளர்கள் நியமனத் தேதியிலிருந்து ஏழு நாட்களுள் அல்லது மக்கள் தீர்ப்பொன்றை எடுக்கும்படி தேவைப்படுத்தப்படுகின்ற பிரகடனமொன்றைச் செய்கின்ற தேதியிலிருந்து ஏழு நாட்களினுள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கின்றவரான அத்தகைய தொழிற்படுத்துநர், உரிமையாளர் அல்லது

வெளியீட்டாளரின் ஒலிபரப்பு அல்லது ஒளிபரப்பு நிலையம் அல்லது செய்தித்தாளொன்றின் சித்தரிக்கின்ற அத்தேர்தலில் எவரேனும் குறிப்பிட்ட வேட்பாளருக்கு அல்லது எவரேனும் குறிப்பிட்ட பெயரிடப்பட்ட அரசியற் கட்சிக்கு அல்லது சுயாதீனக்குழுவுக்கு ஆதரவளித்தல் அல்லது விடயத்துக்கேற்ப மக்கள் தீர்ப்பொன்றில் மக்களுக்கு இடப்பட்ட பிரேரணையை ஆதரித்தல் அல்லது எதிர்த்தல் கொள்கையாகுமென தொழிற்படுத்துநருக்கு உரிமையாளருக்கு அல்லது வெளியீட்டாளருக்கு ஏற்புடைய தாக்கப்படுதல் ஆகாது.

*அரசியலமைப்பின் 104உ என்னும் உறுப்புரையைத் திருத்துதல்.*

**27**. அரசியலமைப்பின் 104உ என்னும் உறுப்புரை, அவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(1) தேர்தல்கள் ஆணையாளர் தலைமையதிபதியொருவர் இருத்தல் வேண்டும். அவர் அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரதிற்கமைவாக, ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்பட வேண்டியவாறான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் மீது ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.".

*அரசியலமைப்பின் 104எஎ என்னும் புதிய உறுப்புரையை உட்புகுத்துதல்.*

**28**. 104எ என்னும் உறுப்புரை உடனடுத்துப்பின்னர் பின்வரும் புதிய உறுப்புரை இத்தால் உட்புகுத்துத்தப்படுகின்றதுடன் அது அரசியலமைப்பின் 104 எஎ என்னும் உறுப்புரையாகப் பயனுறுதலும் வேண்டும்:-

*"பணிப்புக்களுடன் இணங்கியொழுகத் தவறுதல் குற்றமொன்றாதல்.*

104எஎ. (அ) தேர்தல் ஒன்றை நடாத்துவது அல்லது மக்கள் தீர்ப்பொன்றை நடத்துவது தொடர்பிலான ஏதேனும் சட்டத்தின் நடை முறையை உறுதிப்படுத்துவதற்கு ஆணைக்

குழுவுடன் ஒருங்கிணைவதற்கு நியாயமான காரணமன்றி மறுக்கின்ற அல்லது தவறுகின்ற; அல்லது

(ஆ) 104ஆ ஆம் உறுப்புரையின் முறையே (4)ஆம் பந்தியின் (ஆ) என்னும் உட்பந்தியின் கீழ் அல்லது (5) ஆம் பந்தியின் (அ) என்னும் உட்பந்தியின் கீழ் ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட எவையேனும் பணிப்புக்களுடன் அல்லது வழிகாட்டிகளுடன் இணங்கியொழுகுவதற்கு நியாயமான காரணமின்றி தவறுகின்ற,

பகிரங்க அலுவலரொருவர் தவறொன்றைப் புரிந்தவராதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மீது ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றுக்கு அல்லது மூன்று ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாகுதல் வேண்டும்.

(2) அரசியலமைப்பின் 154ஞ ஆம் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்ட மேல்நீதிமன்றம் ஒவ்வொன்றும் (1) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் கருமத்தை விசாரிப்பதற்கும் தீர்மானிப்பதற்குமான நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.".

*அரசியலமைப்பின் 107 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**29.** அரசியலமைப்பின் 107ஆம் உறுப்புரை, அவ்வுறுப்புரையின் (1)ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(1) பிரதம நீதியரசரும், மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவரும் மற்றும் உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் ஏனைய ஒவ்வொரு நீதிபதியும் அரசியலமைப்பு பேரவையின் அங்கீகாரத்துக்கமைய சனாதிபதியினால் கைப்பட எழுதப்பட்ட எழுத்தாணையின்மூலம் நியமிக்கப்படுதல் வேண்டும்."

*அரசியலமைப்பின் 109 ஆம் உறுப்புரையை மாற்றீடு செய்தல்.*

**30.** அரசியலமைப்பின் 109ஆம் உறுப்புரை இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உறுப்புரை இடப்படுகின்றது:-

*"பதில் நியமனங்கள்.*

109. (1) பிரதம நீதியரசர் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் சுகவீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்திற்காக தமது பதவிக்குரிய தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும் நிறைவேற்றுவதற்கும் மற்றும் புரிவதற்கும் தற்காலிகமாக இயலாதவராயிருப்பின், அத்தகைய காலப்பகுதியின்போது விடயத்திற்கேற்ப பிரதம நீதியரசரின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரின் பதவியில் பதிற் கடமையாற்றுவற்காக, அரசியலமைப்பு பேரவையின் அங்கீகாரத்துக்கமைய உயர்நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் வேறொரு நீதிபதியை சனாதிபதி நியமித்தல் வேண்டும்.

(2) உயர்நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் எவரேனும் நீதிபதி சுகவீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காக அவரது அல்லது அவளது பதவிக்குரிய தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் பிரயோகிப்பதற்கும்

நிறைவேற்றுவதற்கும் புரிவதற்கும் தற்காலிகமாக இயலாதவராயிருப்பின், அத்தகைய காலப்பகுதியின் போது, விடயத்துக்கேற்ப உயர் நீதிமன்ற நீதிபதியாக அல்லது மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாகப் பதில்கடமையாற்றுவதற்கென அரசியலமைப்பு பேரவையின் அங்கீகாரத்துக் கமைய வேறோர் நீதிபதியை சனாதிபதி நியமிக்கலாம்.''.

அரசியலமைப்பின் 111ஈ ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.

**31.** அரசியலமைப்பின் 111 ஈ ஆம் உறுப்புரை இத்தால் நீக்கப்பட்டு அதற்குப்பதிலாக பின்வரும் உறுப்புரை இடப்படுகின்றது:-

''நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் அமைப்பு.

111ஈ. (1) அரசியலமைப்பு பேரவையின் அங்கீகாரத்துக்கமைய நியமிக்கப்படும் பிரதம நீதியரசரையும் உயர்நீதிமன்றத்தின் வேறு இரண்டு அதிசிரேட்ட நீதிபதிகளையும் கொண்ட நீதித் துறைச் சேவை ஆணைக்குழுவொன்றிருத்தல் வேண்டும். (இவ்வத்தியாயத்தில் ''ஆணைக்குழு'' எனக் குறிப்பீடு செய்யப்படும்.):

(2) பிரதம நீதியரசர் மற்றும் முதனிலை நீதிமன்றமொன்றின் நீதிபதியொருவராக ஏதேனும் நீதிமுறை அனுபவத்தை கொண்டிராது சேவையாற்றுகின்ற நீதிபதிகளான உயர்நீதிமன்றத்தின் இரண்டு அதிசிரேட்ட நீதிபதிகள் உள்ளவிடத்து, ஆணைக் குழுவானது பிரதம நீதியரசர், உயர்நீதிமன்றத்தின் அதிசிரேட்ட நீதிபதி மற்றும் முதனிலை நீதிமன்றமொன்றின் நீதிபதியாக அனுபவத்தை கொண்டுள்ள அத்தகைய நீதிமன்றத்தின் அடுத்து வரும் அதிசிரேட்ட நீதிபதி என்போரை கொண்டிருத்தல் வேண்டும்.

(3) பிரதம நீதியரசர் ஆணைக்குழுவின் தவிசாளராதல் வேண்டும்.''.

*அரசியலமைப்பின் 111உ ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**32.** அரசியலமைப்பின் 111உ என்னும் உறுப்புரை, அவ்வுறுப்புரையின்(5) மற்றும் (6)ஆம் பந்திகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப்பதிலாக பின்வரும் பந்திகளை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

(5) சனாதிபதி, ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினருக்கு கடமைகளிலிருந்து லீவு அளிக்கலாம் என்பதுடன், அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துக்கமைய, அத்தகைய லீவுக் காலப்பகுதிக்கு தற்காலிக உறுப்பினரொருவராக இருப்பதற்கென ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக இருப்பதற்குத் தகைமையுடைய ஆளொருவரை நியமிக்கலாம்.

(6) சனாதிபதி அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துடன் குறித்தளிக்கப்படும் காரணத்திற்காக ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.”.

*அரசியலமைப்பின் 122 ஆம் உறுப்புரையை நீக்குதல்.*

**33.** அரசியலமைப்பின் 122ஆம் உறுப்புரை, இத்தால் நீக்கப்படுகின்றது.

*அரசியலமைப்பின் 123 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**34.** அரசியலமைப்பின் 123ஆம் உறுப்புரை அவ்வுறுப்புரையின் (3) ஆம் பந்தியை நீக்குவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*அரசியலமைப்பின் 124 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**35.** அரசியலமைப்பின் 124ஆம் உறுப்புரையில் “120ஆம், 121ஆம், 122ஆம் உறுப்புரையில் வேறுவகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு” என்னும் சொற்களுக்குப் பதிலாக “120ஆம் மற்றும் 121ஆம் உறுப்புரையில் வேறுவகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு” என்னும் எண்களையும் சொற்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.”.

*அரசியலமைப்பின் 129 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**36.** அரசியலமைப்பின் 129ஆம் உறுப்புரை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுறுப்புரையின் (2)ஆம் பந்தியை நீக்கிவிடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அவ்வுறுப்புரையின் (3)ஆம் பந்தியில் "அபிப்பிராயம், தீர்மானம், அறிக்கை" என்னும் சொற்களுக்குப்பதிலாக "அபிப்பிராயம் மற்றும் அறிக்கை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

*அரசியலமைப்பின் 134 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**37.** அரசியலமைப்பின் 134ஆம் உறுப்புரையில் "121ஆம், 122 ஆம், 125ஆம்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "121ஆம், 125ஆம்" என்னும் சொற்களையும் எண் களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.".

*அரசியலமைப்பின் 151 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**38.** அரசியலமைப்பின் 151ஆம் உறுப்புரை, அவ்வுறுப்புரை யின் (2) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(2) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர்:-

(அ) அத்தகைய செலவுக்கு அவசியமுள்ளது என்றும் ; அத்துடன்

(ஆ) ஏற்கனவேயுள்ள அத்தகைய செலவுக்கான ஏற்பாடு எதுவும் செய்யப்படவில்லை என்றும்,

திருப்திப்படுவாராயின், அவர் பிரதம அமைச்சரின் சம்மதத் துடன் எதிர்பாராச் செலவு நிதியத்திலிருந்து முற்பணம் வழங்குவதன்மூலம் அதற்காக ஏற்பாடுசெய்வதற்கு அதிகார மளிக்கலாம்.".

*அரசியலமைப்பின் 153 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**39.** அரசியலமைப்பின் 153ஆம் உறுப்புரை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:-

"(1) கணக்காய்வாளர் தலைமையதிபதி ஒருவர் இருத்தல் வேண்டும் ; அவர் அரசியலமைப்புப்

பேரவையின் விதப்புரைக்கமைய சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அவர் நன்னடத்தையுடையவராக இருக்கும் காலத்தின் போது பதவிவகித்தலும் வேண்டும்.": அத்துடன்

(2) அவ்வுறுப்புரையின் (4) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:-

(4) கணக்காய்வாளர் தலைமையதிபதி தமது பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு இயலாதபோது, கணக்காய்வாளர் தலைமையதிபதியின் இடத்தில் செயலாற்றுவதற்கென சனாதிபதி அரசியலமைப்பு பேரவையின் விதப்புரைக்கமைய ஆளொருவரை நியமிக்கலாம்."

*அரசியலமைப்பில் 153அ, 153ஆ, 153இ, 153ஈ, 153உ, 153ஊ, 153எ மற்றும் 153ஏ என்னும் புதிய உறுப்புரைகளை உட்புகுத்துதல்.*

**40.** பின்வரும் உறுப்புரைகள் 153ஆம் உறுப்புரையை உடனடுத்து உட்புகுத்தப்படுகின்றவென்பதுடன் அவை அரசியலமைப்பின் உறுப்புரை 153அ, 153ஆ, 153இ, 153ஈ, 153உ, 153ஊ, 153எ மற்றும் 153ஏ எனப் பயனுறுதலும் வேண்டும்:-

*"கணக்காய்வு சேவை ஆணைக்குழுவின் அமைப்பு.*

153அ. (1) (இவ்வத்தியாயத்தில் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கணக்காய்வு சேவை ஆணைக்குழுவொன்று இருத்தல் வேண்டும். அது ஆணைக்குழுவின் தவிசாளரான கணக்காய்வாளர் தலைமையதிபதியையும் அரசியலமைப்பு பேரவையின் விதப்புரையின் மீது சனாதிபதியால் நியமிக்கப்படும் மற்றும் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) பிரதி கணக்காய்வாளர் தலைமையதிபதியாக அல்லது அதற்கு மேற்பட்ட பதவி வகித்த கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களத்தின் ஓய்வுபெற்ற இரண்டு அலுவலர்கள்;

(ஆ) இலங்கை உயர்நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் அல்லது மேல் நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதியொருவர்; அத்துடன்

(இ) இலங்கை நிருவாக சேவையின் ஓய்வு பெற்ற வகுப்பு 1 அலுவலர்.

(2) (அ) ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப்பட்ட ஆளொருவர்-

(i) சனாதிபதிக்கு முகவரியிடப்பட்ட கடிதத்தின் மூலம் அவரது அல்லது அவளது பதவியிலிருந்து முன்னரே பதவிவிலகினாலொழிய ;

(ii) இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறான பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய ; அல்லது

(iii) பாராளுமன்ற அல்லது மாகாண சபை அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகார சபையின் உறுப்பினரொருவராக வந்தாலொழிய.

மூன்று ஆண்டுகள் சேவை யாற்றுதல் வேண்டும் :-

(ஆ) ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படும் ஆளொருவர் அரசியலமைப்பு பேரவையின் விதப்புரையின் மீது மேலதிக காலப் பகுதியொன்றுக்கு நியமிக்கப்படுவதற்கு தகைமையுடையவராக்கப்படுதல் வேண்டும்.

(3) சனாதிபதி குறித்தளிக்கப்படும் காரணத்துக்காகவும் அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துடனும் (1) ஆம் பந்தியின் கீழ் ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படும் எவரேனும் உறுப்பினரை பதவியிலிருந்து அகற்றலாம்.

(4) ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் மற்றும் உறுப்பினர்களுக்கும் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய படிகள் செலுத்தப்படலாம். அத்தகைய படிகள் திரட்டுநிதியத்தின் மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், தவிசாளரின் அல்லது உறுப்பினர்களின் பதவிக் காலத்தின் போது குறைக்கப்படுதலுமாகாது.

(5) ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் தண்டனைச் சட்டக்கோவையின் அத்தியாயம் IX இன் கருத்தெல்லைக்குள்ளும் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) ஆணைக்குழுவுக்கு செயலாளர் ஒருவர் இருத்தல் வேண்டுமென்பதுடன் அவர் ஆணைக்குழுவால் நியமிக்கப்படுதலும் வேண்டும்.

ஆணைக் குழுவின் கூட்டங்கள்.

153ஆ. (1) ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்டநடப்பெண் ஆணைக்குழுவின் மூன்று உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பாராளுமன்றம் (1) ஆம் பந்திக்கு அமைவாக, ஆணைக்குழுவின் கூட்டங்கள், இலங்கை அரச கணக்காய்வு சேவை தாபிக்கப்படல் மற்றும் அவற்றோடு தொடர்புபட்ட அதற்கு இடைநேர் விளைவான வேறு கருமங்கள் என்பவற்றுக்காக சட்டத்தினால் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

ஆணைக் குழுவின் பணிகள்.

153இ. (1) இலங்கை அரச கணக்காய்வு சேவையைச் சார்ந்த உறுப்பினர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்று கட்டுப்பாடு மற்றும் உறுப்பினர்களின் பதவிவிலகல் என்பன ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் பந்தியில் குறிப்பீடுசெய்யப்படும் பணிகளுக்கு மேலதிகமாக, ஆணைக்குழு பின்வரும் கடமைகள் மற்றும் பணிகளைப் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்:-

(அ) அமைச்சரவையினால் தீர்மானிக்கப்படும் ஏதேனும் கொள்கைக்கு அமைவாக இலங்கை அரச கணக்காய்வு சேவையைச் சார்ந்த உறுப்பினர் களின் ஆட்சேர்ப்பு திட்டங்கள், நியமனம், இடமாற்றம், ஒழுக்காற்று கட்டுப்பாடு மற்றும் பதவி விலக்கல் தொடர்பான விதிகளை அங்கீகரித்தல்;

(ஆ) சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் ஆண்டிறுதி மதிப்பீடுகளை தயாரித்தல்; அத்துடன்

(இ) சட்டத்தினால் ஏற்பாடு செய்யக்கூடிய வாறான அத்தகைய வேறு கடமைகள் மற்றும் பணிகளை புரிதல் மற்றும் நிறைவேற்றுதல்.

ஆணைக்குழுவின் அல்லது இலங்கை அரச கணக்காய்வு சேவையின் எவரேனும் அலுவலரின் முடிபை செல்வாக்குச் செலுத்துதல் அல்லது செல்வாக்கு செலுத்த எத்தனித்தல் தவறொன்றாதல்.

153ஈ. (1) எவரேனும் ஒருவர் அவரின் கடமையின் போது நேரடியாக அல்லது வேறு எவரேனும் ஒருவர் ஊடாக ஏதேனும் முறையில் ஆணைக்குழுவின் அல்லது அதன் எவரேனும் உறுப்பினரின் அல்லது இலங்கை அரச கணக்காய்வுச் சேவையின் எவரேனும் உறுப்பினரின் முடிபு மீது செல்வாக்கைச் செலுத்தும் அல்லது செல்வாக்கு செலுத்த எத்தனிக்கும் ஆள் எவரும் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மீது ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஏழு ஆண்டுகளுக்கு மேற்படாத காலப்பகுதியொன்றுக்கான மறியற்றண்டனை அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட மேல்நீதிமன்றம் ஒவ்வொன்றும் (1)ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் கருமத்தை விசாரிப்பதற்கும் தீர்மானிப்பதற்கும் நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*சட்ட நடவடிக்கை முறைகளிலிருந்தான விடுபாட்டு உரிமை.*

154உ. 126ஆம் உறுப்புரையின் கீழ் உயர் நீதிமன்றத்தின்மீது அளிக்கப்பட்டுள்ள நியாயாதிக்கம் மற்றும் 153எ என்னும் உறுப்புரையின் கீழ் நிருவாக மேன்முறையீட்டு நியாயசபைக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கமையவும் இவ்வத்தியாயத்தின் கீழ் ஆணைக்குழுவுக்கு அல்லது ஏதேனும் சட்டத்தின் கீழ் குறித்தொதுக்கப்பட்ட எவையேனும் பணிகளைப் புரிவதில் ஆணைக்குழுவால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை அல்லது முடிபை விசாரணை செய்வதற்கான, வெளிப்படுத்துவதற்கான அல்லது கேள்விக்குட்படுத்துவதற்கான எத்தகையதுமான அல்லது நியாயாதிக்கத்தை எந்த நீதிமன்றமோ நியாயசபையோ கொண்டிருத்தலாகாது.

*செலவுகளும் செலவினங்களும்.*

153ஊ. ஆணைக்குழுவின் செலவுகளும் செலவினங்களும் திரட்டுநிதியத்தின்மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

*நிருவாக மேன்முறையீட்டு நியாயசபைக்கு மேன்முறையீடு செய்தல்*

153எ. நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம் தொடர்பான அவர் தொடர்பில் ஆணைக்குழுவால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையால் அல்லது ஒழுக்காற்றுவிடயம் அல்லது பதவிவிலக்கல் மீதான ஏதேனும் கட்டளையால் இடருற்றுள்ள இலங்கை அரச கணக்காய்வு சேவையின் எவரேனும் அலுவலர் 59ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட நிருவாக மேன்முறையீட்டு

நியாயசபைக்கு மேன்முறையீடு செய்யலாம் என்பதுடன் அது ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை அல்லது முடிபை மாற்ற, வேறுபடுத்த அல்லது இல்லாதாக்க தத்துவத்தைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

ஆணைக்குழு பாராளுமன்றத்துக்கு வகை சொல்லற்பாலதாதல் வேண்டும்.

*153ஏ.* ஆணைக்குழு அதன் பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் ஏற்பாடுகளுக்கிணங்க பாராளுமன்றத்துக்கு வகைசொல்லற்பாலதாக்கப்படுதலும் பதிலளித்தலும் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஆண்டில் அதன் செயற்பாடுகளின் அறிக்கையொன்றை ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டிலும் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்தலும் வேண்டும்.".

அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.

**41.** அரசியலமைப்பின் 154ஆம் உறுப்புரை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ் உறுப்புரையின் (1)ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:-

"(1) கணக்காய்வாளர் தலைமையதிபதி அரசாங்கத்தின் எல்லாத் திணைக்களங்கள், சனாதிபதிக்கான செயலாளர் அலுவலகம், அமைச்சரவையின் அலுவலகங்கள், நீதித்துறைச்சேவை ஆணைக்குழு, அரசியலமைப்பு பேரவை, 41ஆ என்னும் உறுப்புரைக்கான அட்டவணையில் குறிப்பீடு செய்யப்படும் ஆணைக்குழுக்கள், நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர், பாராளுமன்ற ஆணையாளர், உள்ளூர் அதிகார சபைகள், பகிரங்க கூட்டுத்தாபனங்கள் ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அரசாங்கத்தில் உரித்தாக்கப்பட்டுள்ள தொழில் வேறு பொறுப்பு முயற்சிகளும்

மற்றும் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதும் அல்லது பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்பட்டதுமான எந்த கம்பெனிகளில் நாற்பது சதவீதமான அல்லது அதற்கு மேற்பட்ட பங்குகளை அரசாங்கம் அல்லது பகிரங்க கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூராட்சி சபை வைத்திருக்கின்றதோ அக் கம்பெனிகளின் கணக்குகளை கணக்காய்வு செய்தல் வேண்டும்.'';

(2) அவ்வுறுப்புரையின் (2) ஆம் பந்தியில் ''அத்தகைய ஏதேனும் பகிரங்க கூட்டுத்தாபனத்துக்கு அல்லது தொழில் பொறுப்பு முயற்சிக்கு அல்லது வேறு பொறுப்பு முயற்சிக்கு'' என்னும் சொற்கள் அப்பந்தியில் எங்கெல்லாம் காணப்படுகின்றனவோ அங்கெல்லாம் அச்சொற்களுக்குப் பதிலாக அத்தகைய பகிரங்க கூட்டுத்தாபனத்துக்கு அல்லது தொழில் ''ஓராம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட அல்லது வேறு பொறுப்பு முயற்சிக்கு அல்லது கம்பெனிக்கு'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அவ்வுறுப்புரையின் (5)ஆம் பந்தியின் (ஆ) என்னும் உட்பந்தியில் ''ஏதேனும் பகிரங்க கூட்டுத்தாபனத்தின் அல்லது தொழிற்பொறுப்பு முயற்சியின் அல்லது வேறு பொறுப்பு முயற்சியின்'' என்னும் சொற்கள் எங்கெல்லாம் காணப்படுகின்றதோ அங்கெல்லாம் அச் சொற்களுக்குப் பதிலாக ''ஓராம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பகிரங்க கூட்டுத்தாபனத்துக்கு, தொழில் பொறுப்பு முயற்சிக்கு அல்லது வேறு பொறுப்பு முயற்சிக்கு அல்லது கம்பெனிக்கு'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

*அரசியலமைப்பின் 154ண என்னும் உறுப்புரையைத் திருத்துதல்.*

**42.** அரசியலமைப்பின் 154ண என்னும் உறுப்புரை அவ்வுறுப்புரையின் (1)ஆம் பந்தியில் அப்பந்தியின் (இ) என்னும் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

(இ) மூன்று பெரும்பான்மைச் சமூகங்களைப் பிரதி நிதித்துவப்படுத்துவதற்காக அரசியலமைப்பு பேரவையின் விதப்புரையின் மீது சனாதிபதியால் நியமிக்கப்படும் ஏனைய மூன்று உறுப்பினர்கள் அவர்களுள் ஒவ்வொரு வரும் நிதி, சட்டம், நிருவாகம், தொழில் அல்லது கல்விசார் துறைகளில் அவர் அல்லது அவள் பிரசித்தி பெற்றவர் களாக அல்லது அவற்றில் உயர்பதவி வகித்தவர்களாக இருத்தல் வேண்டும்''.

*அரசியலமைப்பின் 155அ என்னும் உறுப்புரையைத் திருத்துதல்.*

**43**. அரசியலமைப்பின் 155அ ஆம் உறுப்புரை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுறுப்புரையின் (1) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:-

''(1) அரசியலமைப்பு பேரவையின் விதப்புரையின் மீது சனாதிபதியால் நியமிக்கப்படும் ஏழு உறுப்பினர்கள் கொண்ட (இவ்வத்தியாயத்தில் ''ஆணைக்குழு'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) தேசிய பொலிசு ஆணைக்குழு வொன்றிருத்தல் வேண்டும். அவர்களுள் ஆகக்குறைந்தது ஒரு உறுப்பினர் பிரதிப்பொலிசு பரிசோதகர் தலைமை யதிபதியாக பதவிவகித்து ஓய்வுபெற்ற பொலிசு அலுவல ராக இருத்தல் வேண்டும். அரசியலமைப்பு பேரவை அதன் விதப்புரையைச் செய்கையில் பகிரங்க சேவை ஆணைக் குழுவை கலந்தாலோசிக்கலாம். சனாதிபதி அரசியல மைப்பு பேரவையின் விதப்புரையின்மீது உறுப்பினரொரு வரை தவிசாளராக நியமித்தல் வேண்டும்.'', அத்துடன்

(2) அவ்வுறுப்புரையின் (4) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:-

''(4) ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒவ்வொருவரும் இவ்வுறுப்புரையின் (2)ஆம் பந்தியின் கீழ் ஏதேனும் தகவீனத்துக்கு அமைந்தவராக வந்தாலன்றி அல்லது சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பப்படும் எழுத்தின் மூலம் பதவியை முன்னரே துறந்தாலன்றி அல்லது குறித்

தொதுக்கப்பட்ட காரணங்களுக்காகவும் அல்லது அரசியலமைப்பு பேரவையின் அங்கீகாரத்தின் மீதும் சனாதிபதியினால் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலன்றி அல்லது ஒழுக்கக்கேட்டை உட்படுத்துகின்ற ஏதேனும் தவறுக்கு நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப் பட்டாலன்றி அல்லது 81ஆம் உறுப்புரையின் நியதி களின்படி அவர்மீது அல்லது அவள்மீது குடியியற்றகுதி யீனத்தை விதிப்பதற்கான தீர்மானமொன்று நிறைவேற்றப் பட்டாலன்றி அல்லது இவ்வுறுப்புரையின் (6)ஆம் பந்தியின் கீழ் அவரது அல்லது அவளது பதவியை வறி தாக்கியுள்ளாரெனக் கருதப்பட்டாலன்றி அவர் அல்லது அவள் நியமனத் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளை கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்.''.

*அரசியலமைப்பின் 155ஆ என்னும் உறுப்புரையைத் திருத்துதல்.*

**44.** அரசியலமைப்பின் 155ஆ என்னும் உறுப்புரை அவ்வுறுப் புரையின் முடிவில் பின்வரும் புதிய பந்தியை சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

(5) பொலிசு பரிசோதகர் தலைமையதிபதி, அவர் அல்லது அவள் தொடர்பில் கவனத்திற்கெடுக்கப்படும் ஏதேனும் விடயம் தவிர்ந்து, ஆணைக்குழுவின் கூட்டங் களில் சமுகமாயிருப்பதற்கு உரித்துடையவராக்கப்படுதல் வேண்டும். அத்தகைய கூட்டங்களில் வாக்களிப்பதற்கு எந்த உரிமையும் அவருக்கு இல்லை.

*அரசியலமைப்பின் 155இ உறுப்புரையைத் திருத்துதல்.*

**45.** அரசியலமைப்பின் 155இ என்னும் உறுப்புரை, அவ் வுறுப்புரையில் ''நூற்றியிருபத்தாறாம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் கீழ் உயர்நீதிமன்றத்துக்கு அளிக்கப்பட்டுள்ள நியா யாதிக்கத்திற்கு அமைய'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக ''நூற்றியிருபத்தாறாம் உறுப்புரையின் கீழ் உயர்நீதிமன் றத்துக்கு அளிக்கப்பட்டுள்ள நியாயாதிக்கத்திற்கும் மற்றும் 155ஔ என்னும் உறுப்புரையின் கீழ் நிருவாக மேன்முறையீட்டு நியாயசபைக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கும் அமைய'' என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*அரசியலமைப்பின் 155ஊ ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**46**. அரசியலமைப்பின் 155ஊ ஆம் உறுப்புரை அவ் வுறுப்புரையின் (1)ஆம் பந்தியில் ''ஏதேனும் முறையில் ஆணைக்குழுவின் அல்லது குழுவின் முடிவின்மீது செல்வாக்குச் செலுத்துகின்ற அல்லது செல்வாக்குச் செலுத்த எத்தனிக்கின்ற அல்லது தலையிடுகின்ற அல்லது ஆணைக்குழுவின் அல்லது குழுவின் எவரேனும் உறுப்பினர் மீது அவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்ற அல்லது செல்வாக்குச் செலுத்த எத்தனிக்கின்ற'' என்னும் சொற்களுக்குப்பதிலாக ''ஏதேனும் முறையில் ஆணைக்குழுவின் அல்லது குழுவின் அல்லது இவ்வத்தியாயத் தின்கீழ் ஏதேனும் தத்துவம் கையளிக்கப்பட்டுள்ள ஆணைக்குழு வின் எவரேனும் பொலிசு அலுவலரின் முடிபின்மீது செல்வாக் குச் செலுத்துகின்ற அல்லது செல்வாக்குச் செலுத்த எத்தனிக் கின்ற அல்லது தலையிடுகின்ற அல்லது ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினர்மீது அல்லது ஒரு குழுவின் அல்லது ஏதேனும் தத்துவம் கையளிக்கப்பட்டுள்ள எவரேனும் பொலிசு அலுவலரின் மீது அவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்ற அல்லது செல்வாக்குச் செலுத்த எத்தனிக்கின்ற அல்லது தலையிடுகின்ற'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது,

*அரசியலமைப்பின் 155ஊஊ என்னும் உறுப்புரையைத் நீக்குதல்.*

**47**. அரசியலமைப்பின் 155ஊஊ ஆம் உறுப்புரை இத்தால் நீக்கப்படுகின்றது.

*அரசியலமைப்பில் 155எ, 155ஏ, 155ஒ, 155ஓ மற்று 155ஔ என்னும் புதிய உறுப்புரைகளை உட்புகுத்துதல்.*

**48**. அரசியலமைப்பின் 155 ஊஊஊ ஆம் உறுப்புரையை உடனடுத்துப் பின்னர் பின்வரும் உறுப்புரைகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன் அவை முறையே அரசிய லமைப்பின் 155எ, 155ஏ, 155ஒ, 155ஓ மற்றும் 155ஔ ஆம் உறுப்புரைகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

*"ஆணைக்குழுவின் தத்துவங்கள்.*

155எ. (1) (அ) பொலிசு பரிசோதகர் தலைமை யதிபதி தவிர்ந்த வேறு பொலிசு அலுவலர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்று கட்டுப்பாடு மற்றும் பதவிநீக்கம் என்பன ஆணைக் குழுவுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும். ஆணைக் குழு பொலிசு பரிசோதகர் தலைமையதிபதி யுடனான கலந்தாலோசனையுடன் பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்று கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம் தொடர்பில் அதன் தத்துவங்களைப் பிரயோகித்தல் வேண்டும்.

(ஆ)ஆணைக்குழுவானது இவ்வுறுப்புரையின் கீழ் அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையில், அரசியலமைப்பின் XVIIஅ என்னும் அத்தியாயத்தின் கீழ் தாபிக்கப்பட்ட மாகாண பொலிசு சேவை ஆணைக்குழுக்கள் தாபிக்கப்படும் போதிலெல்லாம் அத்தகைய ஆணைக்குழுக்களின் குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்களையும் பணிகளையும் மதிப்புக் குறைத்தல் ஆகாது.

(2) ஆணைக்குழுவானது, பொலிசு அலுவலர் ஒருவருக்கு அல்லது பொலிசு சேவைக்கு எதிராகச் செய்யப்படும் பொதுமக்களின் முறைப்பாடுகளையும் எவரேனும் இடருற்ற ஆளின் முறைப்பாடுகளையும் ஏற்றுக் கவனிப்பதற்கும் புலனாய்வு செய்வதற்குமான நடவடிக்கை முறைகளைத் தாபித்தல் வேண்டுமென்பதுடன், பாராளுமன்றத்தால் அத்தகைய நோக்கத்துக்காக ஆக்கப்பட்ட ஏதேனும் சட்டத்துக்கிணங்க நிவாரணத்தை ஏற்பாடு செய்தலும் வேண்டும். ஆணைக்குழு நிவாரணத்தை வழங்கும்பட்சத்தில், ஆணைக்குழுவானது பொலிசு பரிசோதகர் தலைமையதிபதிக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழு, உள்ளிட்ட பொலிசு அலுவலர்கள் தொடர்பிலான எல்லாக் கருமங்கள் பின்வருவன தொடர்பில் பொலிசு பரிசோதகர் தலைமையதிபதியுடனான கலந்தாலோசனையுடன் ஏற்பாடு செய்தலும் தீர்மானித்தலும் வேண்டும்:-

(அ) ஆட்சேர்ப்பு திட்டங்கள், பதவியுயர்வு மற்றும் இடமாற்றங்கள் தொடர்பிலான அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்ட கொள்கைக்கு அமைவாக அவற்றை வகுத்தமைத்தல்;

(ஆ) பொலிசு சேவையின் வினைத்திறனையும் மற்றும் சுதந்திரத்தையும் மேம்படுத்தல், மற்றும் பயிற்சியளித்தல்;

(இ) தேசியப்பிரிவினதும் மாகாண பிரிவுகளினதும் பயன்பாட்டுக்கு அவசியமான ஆயுதங்கள், வெடிமருந்துகள், மற்றும் வேறு உபகரணங்கள் ஆகியவற்றின் தன்மையும் வகையும் ; அத்துடன்

(ஈ) நடத்தை பற்றிய கோவைகள் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கை முறைகளையும்.

(4) ஆணைக்குழு அரசியலமைப்பின் ஒன்பதாம் அட்டவணையில் உள்ளடக்கியுள்ள நிரல் I இன் பின்னிணைப்பு Iஇன் கீழ் அதற்குரித்தாக்கப்பட்டதான அத்தகைய எல்லாத் தத்துவங்களை பிரயோகித்தலும் அத்தகைய எல்லாப் பணிகளையும் கடமைகளையும் நிறைவேற்றுதலும் புரிதலும் வேண்டும்.

ஆணைக்குழு குழுவொன்றுக்கு குறித்தசில தத்துவங்களை கையளித்தல்.

155ஏ. (1) ஆணைக்குழுவானது, அதனால் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய வகுதிகளைச் சேர்ந்த பொலிசு அலுவலர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவிநீக்கத் தத்துவங்களை ஆணைக்குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட வேண்டியதான (ஆணைக்குழுவின் உறுப்பினர்களைக் கொண்டிராத) ஆணைக்குழுவின் குழுவொன்றுக்கு கையளிக்கலாம்.

(2) ஆணைக்குழு ஏதேனும் அத்தகைய குழுவின் நியமனத்தை வர்த்தமானியில் வெளியிடச் செய்வித்தல் வேண்டும்.

ஆணைக்குழுவினால் குறித்தசில பணிகளைக் கையளித்தல்.

155ஐ. (1) ஆணைக்குழு, பொலிசு அலுவலர்களின் ஏதேனும் வகுதியின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டு மற்றும் பதவி நீக்கத் தத்துவங்களை ஆணைக்குழுவால்

விதந்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கும் நடைமுறைகளுக்கும் அமைய பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிக்கு அல்லது பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியுடனான கலந்தாலோசனையுடன் எவரேனும் பொலிசு அலுவலருக்குக் கையளிக்கலாம்.

(2) ஆணைக்குழு ஏதேனும் அத்தகைய கையளிப்பை வர்த்தமானியில் வெளியிடச் செய்வித்தல் வேண்டும்.

(3) ஓராம் பந்தியின் கீழ் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட குழுவொன்றின் கூட்டங்களுக்கான நடபடிமுறை மற்றும் கூட்ட நடப்பெண் என்பன ஆணைக்குழுவினால் ஆக்கப்படும் விதிகளுக்கிணங்க இருத்தல் வேண்டும். ஆணைக்குழு அத்தகைய விதிகளை வர்த்தமானியில் வெளியிடச் செய்வித்தல் வேண்டும்.

மேன்முறையீடு செய்யும் உரிமை.

155ஔ. (1) பொலிசு அலுவலர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்று கட்டுப்பாடு மற்றும் பதவிநீக்கம் தொடர்பிலான அதன் தத்துவங்கள் எவரேனும் பொலிசு அலுவலருக்கு 155ஓ ஆம் உறுப்புரையின் கீழ் கையளிக்கப்பட்டுள்ளவிடத்து, பொலிசு பரிசோதகர் தலைமையதிபதி அவர் அல்லது அவள் கையளிக்கப்பட்ட தத்துவங்களை பிரயோகிக்கையில் அத்தகைய பொலிசு அலுவலரால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளைக்கெதிராக ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்யும் உரிமையை கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பொலிசு அலுவலர் ஒருவர் தொடர்பில் 155ஏ மற்றும் 155ஒ ஆம் உறுப்புரைகளில் குறிப்பீடு செய்யப்பட்ட பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினால், அல்லது குழுவொன் றால் அல்லது பொலிசு அலுவலரால் செய்யப்பட்ட பதவியுயர்வு, இடமாற்றம் தொடர்பான ஏதேனும் கட்டளையால் அல்லது ஒழுக்காற்று விடயம் அல்லது பதவிநீக்கம் மீதான ஏதேனும் கட்டளை யால் இடருற்ற பொலிசு அலுவலர் ஒருவர் ஆணைக் குழுவினால் மேன்முறையீடொன்றை ஆக்குவதற் கும் கேட்கப்படுவதற்கும் நிர்ணயிக்கப்பட்ட நடவடிக்கைமுறையையும் நேரகாலப்பகுதியையும் ஒழுங்குபடுத்தி காலத்துக்குக்காலம் ஆணைக்குழு வினால் ஆக்கப்படும் விதிகளுக்கிணங்க, அத்த கைய கட்டளைக்கெதிராக ஆணைக்குழுவுக்கு மேன் முறையீடு செய்யலாம்.

(3) ஆணைக்குழுவானது, (1)ஆம் பந்தியின் கீழ் அல்லது (2)ஆம் பந்தியின் கீழ் அத்தகைய மேன் முறையீட்டின் மீது அத்தகைய கட்டளையை மாற்று வதற்கான, வேறுபடுத்துவதற்கான, இல்லாதாக்கு வதற்கான அல்லது உறுதிப்படுத்துவதற்கான அல்லது அது தொடர்பில் பணிப்புகளை வழங்கு வதற்கான அல்லது அது பொருத்தமானதென அதற்குத் தோன்றக்கூடியவாறான அத்தகைய மேலதிக அல்லது வேறு விசாரணைக்கு கட்டளை யிடுவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) ஆணைக்குழுவானது, இவ் உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் கீழ் காலத்துக்குக்காலம் அதனால் ஆக்கப்படும் விதிகளை வர்த்தமானியில் வெளியிடச் செய்வித்தல் வேண்டும்.

(5) இவ்வத்தியாயத்தின் 155ஏ என்னும் அத்துடன் 155ஒ என்னும் உறுப்புரையின் கீழ் விடயத்திற்கேற்ப பொலிசுப் பரிசோதகர் தலைமை யதிபதிக்கு அல்லது குழுவொன்றுக்கு அல்லது பொலிசு அலுவலர் ஒருவருக்கு செய்யப்படும் அதன் தத்துவங்களின் ஏதேனும் கையளிப்பின் மீது, ஆணைக்குழுவானது, அதன் தத்துவங்களின் அத்தகைய கையளிப்பு வலுவில் இருக்கையில் இதனகத்துமுன்னர் ஏற்பாடு செய்யப்பட்ட மேன்முறையீட்டு உரிமைக்கமைவாக, எந்த வகுதி களைச் சேர்ந்த பொலிசு அலுவலர்கள் தொடர்பில் அத்தகைய கையளிப்பு செய்யப்படுகின்றதோ அந்த வகுதியைச் சேர்ந்த பொலிசு அலுவலர்கள் தொடர்பில் அதன் தத்துவங்களை கடமைகளைப் அல்லது பணிகளை பிரயோகித்தலோ நிறை வேற்றுதலோ அல்லது புரிதலோ ஆகாது.

நிருவாக மேன்முறையீட்டு நியாயசபைக்கு மேன்முறையீடு செய்தல்.

155ஔ. பொலிசு அலுவலர் தொடர்பில் ஆணைக்குழுவால் செய்யப்பட்ட பதவியுயர்வு, இடமாற்றம் அல்லது பதவிநீக்கம் ஒழுக்காற்று விடயம் மீதான ஏதேனும் கட்டளை அல்லது ஆணைக்குழுவில் ஆக்கப்பட்ட பதவிநீக்கம் தொடர்பான ஏதேனும் கட்டளையால் இன்னலுற்ற எவரேனும் பொலிசு அலுவலர் 59ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட நிருவாக மேன் முறையீட்டு நியாய சபைக்கு மேன்முறையீடு செய்யலாம். அந்நியாயசபை ஆணைக்குழுவால் செய்யப்பட்ட ஏதேனும் கட்டளையை அல்லது முடிபை மாற்று வதற்கு வேறுபடுத்துவதற்கு அல்லது இல்லா தாக்குவதற்கு தத்துவத்தைக் கொண்டுள்ளது.”.

**49**. அரசியலமைப்பின் 155க என்னும் உறுப்புரையானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உறுப்புரை இடப்படுகின்றது:- *அரசியலமைப்பின் 155க என்னும் உறுப்புரையை மாற்றீடு செய்தல்.*

*உளதாம் விதிகளையும் ஒழுங்கு விதிகளையும் பேணுதல்.*

155க ஆணைக்குழுவானது வேறு விதமாக ஏற்பாடு செய்யும் வரை, பொலிசுப்படை தொடர்பில் இவ்வுறுப்புரை நடைமுறைக்குவரும் தேதியன்று வலுவிலுள்ளவாறான எல்லா விதிகளும் ஒழுங்குவிதிகளும் மற்றும் நடவடிக்கை முறைகளும் தொடர்ந்து செயற்பாடுடையதாதலும் வலுவிலிருத்தலும் வேண்டும்.".

**50**. அரசியலமைப்பின் 156ஆம் உறுப்புரையானது இத்தால் பின்வருமாறு நீக்கப்படுகின்றது:- *அரசியலமைப்பின் 156 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

(1) அவ்வுறுப்புரையின் (2) ஆம் பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாக பின்வரும் பந்தியினை இடுவதன் மூலமும்:-

"(2) நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அரசியலமைப்பு பேரவையின் அங்கீகாரத்துக்கமைவாக சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் நன்னடத்தைக் காலத்தின்போது பதவி வகித்தலும் வேண்டும்."; அத்துடன்

(2) அவ்வுறுப்புரையின் (5) ஆம் பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாக பின்வரும் பந்தியினை இடுவதன் மூலமும்:-

"(5) நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் தமது பதவிக்குரிய கடமைகளையும் பணிகளையும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் இயலாதுள்ள போதிலெல்லாம், அவருக்கு அல்லது அவளுக்குப் பதிற்கடமையாற்றுவதற்கென அரசியலமைப்பு பேரவையின் அங்கீகாரத்துக்கமைய ஓர் ஆளை சனாதிபதி நியமித்தல் வேண்டும்.".

அரசியலமைப்பில் புதிய அத்தியாயங்கள் XIXஅ மற்றும் XIXஆ என்பனவற்றை உட்புகுத்துதல்.

**51.** பின்வரும் புதிய அத்தியாயங்கள் அரசியலமைப்பில் அத்தியாயம் XIX இனை உடனடுத்துப் பின்னர் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன் அவை முறையே அரசிய லமைப்பின் XIXஅ மற்றும் XIXM என்னும் அத்தியாயங்களாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"அத்தியாயம் XIXஅ

## இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு

இலஞ்சம் அல்லது ஊழலை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு.

156அ.(1) பாராளுமன்றம், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்காக ஆணைக்குழுவொன்றினைத் தாபிப்பதற்கு சட்டத்தினால் ஏற்பாடு செய்தல் வேண்டும். அத்தகைய சட்டம் பின்வருவனவற்றுக்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்:-

(அ) அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது சனாதிபதியினால் ஆணைக் குழுவின் உறுப்பினர்களை நியமனம் செய்வதற்கும் ;

(ஆ) அதனது சொந்தப் பிரேரணை மீதோ அல்லது அதற்குச் செய்யப்பட்ட முறைப்பாடு ஒன்றின் மீது இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களின் ஆரம்ப விசாரணை ஒன்றை நடாத்துதல் அல்லது புலன் விசாரணை செய்தலை பணிக்கின்ற தத்துவம் மற்றும் இலஞ்ச அல்லது ஊழல் தொடர்பிலான நடைமுறையில் உள்ள சட்டத்தின் கீழ் தவறுகளுக்கான குற்ற வழக்கு தொடருவதற்கான தத்துவம் உட்பட ஆணைக்குழுவின் தத்துவங்களுக்கும் ;

(இ) ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சமவாயம் மற்றும் இலங்கை திறத்தவராக உள்ள ஊழலைத் தடுப்பது தொடர்பிலான வேறு ஏதேனும் சர்வதேச சமவாயங்களை நடைமுறைப் படுத்துவதற்கான வழிமுறைகளிற்கும்.

(2) பாராளுமன்றம் அவ்வாறு ஏற்பாடு செய்யும் வரை 1994ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டம், ஆணைக்குழு அதனது சொந்தப் பிரேரணை மீதோ அல்லது அதற்குச் செய்யப்பட்ட எழுத்திலான முறைப்பாடு ஒன்றின் மீதோ இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல் ஒன்றை விசாரிப்பதற்கு அல்லது புலனாய்வு செய்வதற்கு அச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவிற்கு அது சட்டமுறையானதாக இருத்தல் வேண்டும் என்ற திரிபுகளுக்கு அமைய ஏற்புடையதாதல் வேண்டும்.

## அத்தியாயம் XIXஆ

### தேசிய பெறுகை ஆணைக்குழு

தேசிய பெறுகை ஆணைக்குழு.

156ஆ. (1) (இவ்வத்தியாயத்தில் “ஆணைக்குழு” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) தேசிய பெறுகைப் ஆணைக்குழு ஒன்று இருத்தல் வேண்டும். அது பெறுகை, கணக்கியல், சட்டம் அல்லது பொது நிருவாகம் ஆகிய துறைகளில் எண்பிக்கப்பட்ட அனுபவத்தை உடைய ஆட்களிடையேயிருந்து ஆகக் குறைந்தது மூன்று உறுப்பினர்களைக் கொண்ட அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது சனாதிபதியினால் நியமிக்கப்படும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்டமைந்ததாதல் வேண்டும். அரசியலமைப்பு பேரவையின் விதப்புரையின் மீது சனாதிபதி உறுப்பினர் ஒருவரை ஆணைக்குழுவின் தவிசாளராக நியமித்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒவ்வொருவரும், அவர் சனாதிபதிக்கு முகவரியிடப்பட்ட எழுத்திலான கடிதத்தின் மூலம் பதவியிலிருந்து முன்னரே விலகியிருந்தாலன்றி அல்லது அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துடன் குறித்தொதுக்கப்பட்ட காரணத்துக்காக சனாதிபதியினால் பதவியிலிருந்து அகற்றப்பட்டிருந்தாலன்றி அல்லது ஒழுக்கக்கேட்டை உள்ளடக்கும் தவறொன்றிற்கு சட்ட நீதிமன்றம் ஒன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருந்தாலன்றி அல்லது பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக அல்லது மாகாண சபை ஒன்றின் அல்லது உள்ளூரதிகார சபை ஒன்றின் உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலன்றி அல்லது அவர் அல்லது அவள் மீது குடியியற்றகுதியீனத்தை விதிப்பதற்கான தீர்மானமொன்றை 81ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி நிறைவேற்றப்பட்டிருந்தாலன்றி அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்று வருட காலப்பகுதியொன்றிற்கு பதவி வகித்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் ஒவ்வொரு உறுப்பினருக்கும் பாராளுமன்றத்தின் தீர்மானம் ஒன்றின் மூலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிகள் செலுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய படிகள் திரட்டு நிதியத்தின் மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய தவிசாளர் அல்லது உறுப்பினர் ஆகியோரின் பதவிக்காலத்தின் போது குறைக்கப்படுதலுமாகாது.

ஆணைக்குழுவின் பணிகள்

156இ. (1) எல்லா அரசாங்க நிறுவனங்களினாலும் பண்டங்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கான நியாயமான, ஒப்புரவான, வெளிப்படையான, போட்டியான மற்றும் செலவுத் திறனான நடவடிக்கை முறைகளையும் வழிகாட்டல்களையும் வகுத்தமைத்தல் ஆணைக்குழுவின் பணியாதல் வேண்டும்

(2) ஓராம் பந்தியில் பொதுமைக்குப் பங்கமின்றி பின்வருவனவற்றைச் செய்தல் ஆணைக்குழுவின் பணிகளாதல் வேண்டும்:-

(அ) அரசாங்க நிறுவனங்களினாலும் செய்யப் படும் பண்டங்கள் மற்றும் சேவைகளின் எல்லா பெறுகைகளும் முன்னரே அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கைத் திட்டங்களிற்கு இணங்க, தயாரிக் கப்பட்ட பெறுகை திட்டங்களின் அடிப்படை யானதா என்பது பற்றி கண்காணித்தலும் தோதான அதிகாரிகளுக்கு அறிக்கையிடுதலும்

(ஆ) அரசாங்க நிறுவனங்களிற்கு பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கான தகைமை பெற்ற விலைகூறுபவர்கள் யாவருக்கும் அப் பண்டங்கள் மற்றும் சேவைகளினை வழங்கு வதற்காக விலைகூறும் செயற்பாட்டில் பற்குபற்று வதற்கான சமமான சந்தர்ப்பம் ஒன்று அளிக்கப் படுகின்றதா என்பது பற்றி கண்காணித்தலும் தோதான அதிகாரிகளுக்கு அறிக்கையிடுதலும்

(இ) அரசாங்க நிறுவனங்களிற்கான பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கான ஒப்பந்த காரர்களைத் தெரிவு செய்வதற்கும் ஒப்பந்தங்கள் வழங்குவதற்குமான நடவடிக்கை முறைகள் நியாயமானதும் வெளிப்படையானவையாகவும் இருக்கின்றனவா என்பது பற்றி கண்காணித்தலும் தோதான அதிகாரிகளுக்கு அறிக்கையிடுதலும்;

(ஈ) அரசாங்க நிறுவனங்களினால் உயர்பெறு மதி வாய்ந்த பெறுகைகள் தொடர்பாக பெறுகைக் குழுக்கள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள் ஆகியனவற்றின் உறுப்பினர்கள் பொருத்தமான தகைமையுடையவராக இருக்கின் றார்களா என அறிக்கையிடுதலும் ; அத்துடன்

(உ) தாபிக்கப்பட்ட நடவடிக்கை முறைகளுக்கு வெளியே அரசாங்க நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட பெறுகைகள் பற்றிய அறிக்கைகளைப் புலனாய்வு செய்தலும், அத்துடன் அத்தகைய பெறுகைகளிற்கு பொறுப்பான அலுவலர்கள் அவசியமான நடவடிக்கைக்காக இயைபான அதிகாரிகளுக்கு அறிக்கையிடுதலும்.

ஆணைக் குழுவின் தத்துவங்கள்.

156ஈ. (1) ஆணைக்குழு எழுத்திலான அறிவித்தல்மூலம் பின்வருவனவற்றைச் செய்ய எவரேனும் ஆளை தேவைப்படுத்தலாம்:-

(அ) ஆணைக்குழுவால் கேள்விக்குட்படுத்தப்படுவதற்கு ஆணைக்குழுவின் முன்னர் சமுகமளிப்பதற்கு;

(ஆ) அவ்வாளின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ளதும் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டதுமான ஏதேனும் ஆவணத்தை அல்லது பொருளை ஆணைக்குழுவுக்கு காண்பிப்பதற்கு.

(2) (அ) ஓராம் பந்தியின் கீழ் அவருக்கு அல்லது அவளுக்கு அனுப்பப்பட்ட அறிவித்தலொன்றினால் அவ்வாறு செய்வதற்கு தேவைப்படுமிடத்து, ஆணைக்குழுவின் முன்னர் தோன்றுவதற்கு நியாயமான காரணமின்றி தவறும்;

(ஆ) அத்தகைய அறிவித்தலுடன் இணங்கியொழுகுவதில் ஆணைக்குழுவுக்கு முன்னர் தோன்றி, ஆனால் ஆணைக்குழுவால் அவருக்கு அல்லது அவளுக்கு விடப்பட்ட எவையேனும் கேள்விகளுக்கு பதிலளிப்பதற்கு நியாயமான காரணமின்றி மறுக்கும்; அல்லது

(இ) ஒராம் பந்தியின் கீழ் அவருக்கு அல்லது அவளுக்கு அனுப்பப்பட்ட அறிவித்தலொன்றில் காண்பிக்கப்படுதற்கு அவரை அல்லது அவளை தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் ஆவணத்தை அல்லது பொருளை காண்பிப்பதற்கு நியாயமான காரணமின்றி தவறும் அல்லது மறுக்கும்;

ஒவ்வோராளும் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தன்மீது ஒரு இலட்சத்துக்கு மேற்படாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஏழு ஆண்டு களுக்கு மேற்படாத காலப்பகுதியொன்றுக்கான மறியற் தண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்தண்டனைக்கு ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(3) அரசியலமைப்பின் 154ஞ ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட மேல்நீதிமன்றம் ஒவ்வொன்றுக்கும் (2)ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் கருமத்தை விசாரிப்பதற்கும் தீர்மானிப்பதற்கும் நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஆணைக் குழுவின் கூட்டங்கள்.

156உ. (1) ஆணைக்குழுவானது அதன் பணிகளை புரிதலுக்காக அவசியமாக இருக்கக்கூடிய வாறாக அடிக்கடி கூடுதல் வேண்டும்.

(2) தவிசாளர் ஆணைக்குழுவின் எல்லாக் கூட்டங்களிலும் தலைமைதாங்குதல் வேண்டும். ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கு தவிசாளர் சமுகமளிக்கதவறின், சமுகமாயுள்ள உறுப்பினர்கள் அவர்களுக்கிடையேயிருந்து அக்கூட்டத்திற்கான தவிசாளர் ஒருவரைத் தெரிவுசெய்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் மூன்றாதல் வேண்டும்.

(4) ஆணைக்குழுவின் முடிபுகள் முடிவு எடுக்கப்படும் கூட்டத்தில் சமூகமாயிருந்து வாக் களிக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை யொன்றினால் வேண்டுமென்பதுடன் வாக்குகள் சமமாக இருக்கும் பட்சத்தில் தவிசாளர் அல்லது கூட்டத்தில் தலைமைதாங்கும் உறுப்பினர் அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(5) இவ்வுறுப்புரையின் முற்போந்த ஏற்பாடு களுக்கமைவாக ஆணைக்குழு அதன் கூட்டங்கள் தொடர்பான நடவடிக்கை முறை மற்றும் அத்தகைய கூட்டங்களின் அலுவலக விடயங்கள் தொடர்பில் தீர்மானிக்கலாம்.

(6) ஆணைக்குழு அதன் உறுப்பாண்மையின் ஏதேனும் வெற்றிடமொன்றுள்ளது எது எவ் வாறிருப்பினும், செயலாற்றுவதற்கு தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் ஆணைக் குழுவின் செயல், நடவடிக்கை அல்லது முடிபு எதுவும் உறுப்பினரொருவரின் நியமனத்தில் அத்தகைய வெற்றிடம் அல்லது குறைபாடு உள் ளது என்ற காரணத்தால் மட்டும் செல்லுபடி யற்றதாக அல்லது செல்லுபடியற்றதாக்கப் படுவதாக கருதப்படுதலாகாது.

ஆணைக் குழுவின் பணியாட்பொகுதி.

156ஊ. (1) ஆணைக்குழுவால், தீர்மானிக்கப் படக் கூடியவாறான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மீது அதன் பணிகளை முறையாக நிறைவேற்றுவதற்கு அவசியமானதென கருதப் படக்கூடியவாறான செயலாளர் நாயகம் மற்றும் அத்தகைய வேறு அலுவலர்களையும் ஆணைக் குழு நியமித்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் எல்லா உறுப்பினர்களும் அலுவலர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் IX ஆம் அத்தியாயத்தின் கருத்தெல்லைக்குள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) அரசியலமைப்பின் கீழ் ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினர் அல்லது அலுவலர் கடமைகளை நிறைவேற்றுவதில் அல்லது அவருடைய அல்லது அவளுடைய பணிகளைப் புரிவதில் அவரால் அல்லது அவளால் நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாக கருதப்பட்ட ஏதேனும் செயல் அல்லது காரியத்துக்காக ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினருக்கு அல்லது அலுவலருக்கு எதிராக வழக்கு துடர்ச்சியெதுவும், வழக்கெதுவும், அல்லது வேறு நடவடிக்கைமுறையெதுவும் தொடுக்கப்படுதல் ஆகாது.

திரட்டு நிதியத்தின் மீது பொறுப்பிக்கப்பட வேண்டிய ஆணைக்குழுவின் செலவுகள்.

156எ. (1) ஆணைக்குழுவின் செலவுகள் திரட்டு நிதியத்தின் மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

பொருள்கோடல்.

156ஏ. இவ்வத்தியாயத்தில் "அரசாங்க நிறுவனம்" என்பது அமைச்சு, அரசாங்கத் திணைக்களம், பகிரங்கக் கூட்டுத்தாபனம், உள்ளூரதிகார சபை, அரசாங்கத்தில் உரித்தாக்கப்பட்ட ஏதேனும் தொழில் அல்லது வேறு தொழிற்முயற்சி மற்றும் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட எந்தக் கம்பெனியில் அரசாங்கம், ஒரு பகிரங்க கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூரதிகாரசபை நாற்பது சதவீதத்திற்கு மேற்பட்ட பங்குகளை வைத்திருக்கின்றதோ அந்தக் கம்பெனி ஒன்று என்பனவற்றை உள்ளடக்குகின்றது.".

**52.** அரசியலமைப்பின் 170ஆம் உறுப்புரையின், "பகிரங்க அலுவலர்" என்னும் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

*அரசியலமைப்பின் 170 ஆம் உறுப்புரையை திருத்துதல்.*

"பகிரங்க அலுவலர்" என்பது- நீதித்துறை அலுவலர் தவிர்ந்த ஆனால் பின்வருவோரை உள்ளடக்காத குடியரசின் கீழ் சம்பளத்துக்காக ஏதேனும் பதவி வகிக்கின்ற ஆளொருவர் என்று பொருள்படும்-

(அ) சனாதிபதி ;

(ஆ) பிரதம அமைச்சர் ;

(இ) சபாநாயகர் ;

(ஈ) ஓர் அமைச்சர் ;

(உ) பிரதி அமைச்சர் ;

(ஊ) பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் ;

(எ) அரசியலமைப்புப் பேரவையின் உறுப்பினர் ஒருவர் ;

(ஏ) நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் ;

(ஐ) பகிரங்க சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் ;

(ஒ) தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் ;

(ஓ) தேசிய பொலிசு ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் ;

(ஔ) கணக்காய்வு சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் ;

(க) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் ;

(ங) இலஞ்சம் அல்லது ஊழல் தொடர்பிலான சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் ;

(ச) நிதி ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் ;

(ஞ) தேர்தல் நிர்ணய ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் ;

(ட) தேசிய பெறுகை ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் ;

(ண) பாராளுமன்ற செயளாளர் தலைமையதிபதி ;

(த) சனாதிபதி பணியாட்டொகுதி உறுப்பினர் ஒருவர் ;

(ந) பாராளுமன்ற செயலாளர் தலைமையதிபதியின் பணியாட்டொகுதி உறுப்பினர் ஒருவர்; அத்துடன்

(ப) கணக்காய்வாளர் தலைமையதிபதி.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**53.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*நிலை பெயர்கால ஏற்பாடுகள்.*

**54.** (1) ஐயங்களைத் தவிர்ப்பதற்காக, இத்தால் பின்வருமாறு வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) இச்சட்டம் சட்டமாக வருவதற்கு முற்போந்த நாளன்று நிலையாகவுள்ள பாராளுமன்றம் முன்னரே கலைக்கப்பட்டாலன்றி 2016, ஏப்பிறல் 21ஆம் தேதிவரை தொடர்ந்து பணியாற்றுதல் வேண்டுமென்பதுடன் அதன் பின்னர் கலைக்கப்படுதலும் வேண்டும்;

(ஆ) 2015, ஏப்பிறல் 22 ஆம் தேதிக்கு முற்போந்த நாளன்று சனாதிபதியாகவும் பிரதம அமைச்சராகவும் முறையே பதவி வகிக்கின்ற ஆட்கள் இச்சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய அத்தகைய தேதிக்குப் பின்னர் அத்தகைய பதவி வகித்தல் தொடருதல் வேண்டும்; அத்துடன்

(இ) இச்சட்டம் சட்டமாக வருகின்ற தேதிக்கு முற்போந்த நாளன்று பதவிவகிக்கின்ற பின்வரும் ஒவ்வோராளும் அத்தகைய பதவி வகித்தலை தொடருதல் வேண்டும் என்பதுடன் 41இ ஆம் உறுப்புரையின் (3) ஆம் பந்திக்கமைய அதே நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் அப்பதவியின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறை வேற்றுதல் வேண்டும்:-

(i) பிரதம நீதியரசர்;

(ii) உயர்நீதிமன்ற நீதிபதிகள் ;

(iii) நீதித்துறைச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் ;

(iv) மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் ;

(v) மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகள்;

(vi) சட்டமா அதிபர்;

(vii) கணக்காய்வாளர் தலைமையதிபதி;

(viii) பொலிசு பரிசோதகர் தலைமையதிபதி;

(ix) நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்ஸ்மன்); அல்லது

(x) பாராளுமன்றச் செயலாளர்நாயகம்.

(2) இச்சட்டம் சட்டமாக வருவதற்கு முற்போந்த நாளன்று பின்வருவனவற்றின் தவிசாளராக அல்லது உறுப்பினரொருவராக பதவி வகிக்கின்ற ஒவ்வோராளும் இச்சட்டம் சட்டமாக வருகின்ற தேதியில் இருந்து பயனுறும் வகையில் அத்தகைய பதவியை வகிக்காதொழித்தல் வேண்டும்.

(அ) பாராளுமன்றப் பேரவை ;

(ஆ) பகிரங்க சேவை ஆணைக்குழு ;

(இ) தேசிய பொலிசு ஆணைக்குழு;

(ஈ) மனித உரிமைகள் ஆணைக்குழு ;

(உ) இலஞ்சம் அல்லது ஊழல் தொடர்பிலான சார்த்துதல்களை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு; அல்லது

(ஊ) நிதி ஆணைக்குழு.

(3) (அ) இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதிக்கு நேர்முந்திய நாளன்று தேர்தல்கள் ஆணையாளராகப் பதவி வகிக்கின்ற ஆள், 103ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி தேர்தல் ஆணைக்குழு அமைத்துருவாக்கப்படும்வரையும் அத்தகைய தேதியன்றும் அத்துடன் தேர்தல் ஆணைக்குழுவினதும் தேர்தல்கள் ஆணையாளர் என்ற பதவி அவருக்கு அல்லது அவளுக்குரித்தாக்கப்பட்டது என்றாற்போன்று அப்பதவிக்காக தத்துவங்களையும் பணிகளையும் தொடர்ந்தும் பிரயோகித்தலும் புரிதலும் வேண்டும். அத்துடன் தேர்தல் ஆணைக்குழு அங்ஙனம் அமைந்துருவாக்கப்பட்ட தேதியிலிருந்தும் அதன் பின்னரும் தேர்தல்கள் ஆணையாளராக பதவி வகிக்காதொழிதலும் வேண்டும்.

(ஆ) 103 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி தேர்தல் ஆணைக்குழு அமைத்துருவாக்கப்படும் தேதிக்கு முற்போந்த நாளில் தேர்தல்கள் ஆணையாளரால் அல்லது அவருக் கெதிராகத் தொடரப்பட்டு முடிவுறாதுள்ள எல்லா வழக்குத் துடர்ச்சிகளும், வழக்குகளும் ஏனைய சட்ட நடவடிக்கைகளும் தேர்தல் ஆணைக்குழுவினால் அல்லது அதற்கெதிராக தொடரப்பட்ட வழக்கு துடர்ச்சிகளாகவும் வழக்குகளாகவும் ஏனைய சட்ட நடவடிக்கைகளாகவும் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அவை தேர்தல் ஆணைக்குழுவின் பெயரில் தொடர்ந்து நடாத்தப்பட்டு முடிவுறுத்தப்படுதலும் செய்யப் படுதலும் வேண்டும்.

(இ) 103ஆம் உறுப்புரையின் கீழ் அமைத்துருவாக்கப்பட்ட தேர்தல் ஆணைக்குழு அமைத்துருவாக்கப்படும் தேதிக்கு முன்னர் ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் தேர்தல்கள் ஆணை யாளரினால் ஆக்கப்பட்ட ஏதேனும் முடிபு, அல்லது கட்டளை அல்லது வழங்கப்பட்ட தீர்வு, தேர்தல் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட முடிபாக அல்லது கட்டளையாக அல்லது வழங்கப் பட்ட தீர்வாக கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அவை அதற் கிணங்க நடைமுறைக்குவருதலும் வேண்டும்.

(ஈ) 103ஆம் உறுப்புரையின் கீழ் தேர்தல் ஆணைக்குழு அமைந் துருவாக்கப்படும்போது சந்தர்ப்பம் தேவைப்படுத்தினாலே யொழிய ''தேர்தல்கள் ஆணையாளர்'' மற்றும் ''தேர்தல்கள் ஆணையாளர் திணைக்களம்'' என்னும் சொல்லமைப்புக்கள் அரசியலமைப்பிலும் எழுத்திலான ஏதேனும் சட்டத்திலும் மற்றும் ஏதேனும் ஒப்பந்தத்திலும் உடன்படிக்கையிலும் அல்லது வேறு ஆவணத்திலும் எங்கெல்லாம் காணப்படுகின்றதோ அங்கெல்லாம் ''தேர்தல் ஆணைக்குழு'' என்னும் சொல்லமைப்பு பதிலீடு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இச்சட்டம் சட்டமாகவரும் தேதிக்கு முந்தைய நாளன்று பகிரங்கசேவை ஆணைக்குழுவின் முன்னர் முடிவுறாதுள்ள பின்வரும்

(அ) பொலிசு அலுவலர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம் தொடர்பிலான எல்லாக்கருமங்களும்; அத்துடன்

(ஆ) பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்கு பொலிசு அலுவலர்களினால் செய்யப்பட்ட எல்லா மேன்முறையீடுகள் தொடர் பிலான எல்லாக்கருமங்களும்,

அத்தேதியிலிருந்து பயனுறும் வகையில் 155அ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட தேசிய பொலிசு ஆணைக் குழுவுக்கு மாற்றப்படுதல் வேண்டுமென்பதுடன், அவை முறையே தேசிய பொலிசு ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படுதலும் வேண்டும்.

(5) இலங்கை அரச கணக்காய்வு சேவையின் உறுப்பினர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்று கட்டுப்பாடு மற்றும் பதவிநீக்கம் தொடர்பிலானதும் மற்றும் இச்சட்டம் சட்டமாக வருவதற்கு முற்போந்த நாளன்று பகிரங்க சேவை ஆணைக்குழுவின் முன்னர் முடிவுறாதுள்ளதுமான எல்லாக் கருமங்களும் 153அ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட கணக்காய்வு சேவை ஆணைக்குழுவுக்கு அத்தேதியிலிருந்து பயனுறும் வகையில் மாற்றப்படுதல் வேண்டுமென்பதுடன் முறையே கணக்காய்வு சேவை ஆணைக்குழுவால் தீர்மானிக் கப்படுதலும் வேண்டும்.

குறித்த உறுப்புரைகள் நடைமுறைக்கு வருகின்ற தேதியன்று தொடங்குகின்ற காலப்பகுதி தொடர்பிலான விசேட ஏற்பாடுகள்.

**55.** (1) இச்சட்டத்தின் 3, 4, 5, 6, 7, 8, 9 (46 ஆம் உறுப்புரையின் (1) ஆம் பிரிவு தவிர்ந்த) 11, 17, 19, 20, 21, 23, 33, 34, 35, 36, 37 மற்றும் 38 ஆம் உறுப்புரைகளின் ஏற்பாடுகள் வலுவுக்கு வருகின்ற தேதியன்று தொடங்குகின்றதும் பாராளுமன்ற உறுப்பினர்களின் அடுத்த பொதுத் தேர்தலின் தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியின்போது:-

30 (அ) சனாதிபதி, அமைச்சரவையின் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குதல் வேண்டும்

(ஆ) சனாதிபதி, பிரதம அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அவருக்கு அல்லது அவளுக்கு ஏதேனும் விடயத்தை அல்லது பதவியை குறித்தொதுக்கலாமென்பதுடன், அவரது அல்லது அவளது பொறுப்பில் இருக்க வேண்டிய அமைச்சுக்களையும் தீர்மானிக்கலாம்

குறித்தசில விடயங்களுக்கும் பணிகளுக்கும் பதவியிலுள்ள சனாதிபதி பொறுப்பாதல் வேண்டும்.

**56.** அரசியலமைப்பில் அவற்றுக்கு முரணாக எது எவ்வாறிருப்பினும் இச்சட்டம் சட்டமாக வருகின்ற தேதியன்று தொடங்குகின்ற காலப்பகுதியின்போது இச்சட்டம் சட்டமாக வருகின்ற தேதிக்கு முற்போந்த நாளன்று சனாதிபதியாக பதவிவகிக்கின்ற ஆள் பதவிவகிக்கும் வரை சனாதிபதி பதவியை வகித்தல் வேண்டுமென்பதுடன் பின்வரும் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலும் வேண்டும்:-

(அ) சனாதிபதி பாதுகாப்பு, மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் என்னும் விடயங்கள் மற்றும் பணிகளுக்கு தம்மை குறித்தொதுக்கலாம் என்பதுடன் அந்நோக்கத்துக்காக பொறுப்பாகவுள்ள அமைச்சர்களையும் அத்தகைய விடயம் அல்லது பணி எவ்வமைச்சருக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அவ்வமைச்சருக்கு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் ஏதேனும் ஆற்றுப்படுத்துகையை அதற்கிணங்க தீர்மானிக்கலாம் என்பதுடன் சனாதிபதிக்கு ஆற்றுப்படுத்துவதாக வாசித்து பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) சனாதிபதி ஏதேனும் முடிபுகளை எடுக்கும் நோக்கத்திற்காகவும் (அ) என்னும் பந்தியின் கீழ் அவருக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள விடயம் அல்லது பணி தொடர்பில் ஏதேனும் கொள்கையை தீர்மானிப்பதற்காகவும் அல்லது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஏதேனும் கருமத்தை கலந்துரையாடுவதற்காகவும் அமைச்சரவையின் கூட்டங்களை கூட்டலாம் என்பதுடன் அமைச்சரவையின் அத்தகைய கூட்டத்தில் தலைமைதாங்குதலும் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்